Free Circulation Germany-England-Swiss
புரட்டாதி.Sept.2019

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years in Europe
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
29 வது ஆண்டு நிறைவில்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

## சர்வதேசத்தை சீண்டிவிட்டுள்ள இராணுவத் தளபதி நியமனம்





S.K.SILKS GOLD PARAADISE
Dortmund நகரில்
தமிழர் தெருவிழாவை முன்னிட்டு
அசத்தலான ஆடைத் தெரிவுகளுடன்
எமது அதிரடி மலிவு விற்பனை
07.09.2019 சனிக்கிழமை
17th Anniversary
விபரம் 29 பக்கம்
Mr.P.Sritharan.Proprietor
Tel:0231 9501 647
Adler str 33 - 44137 Dortmund

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam
RHEINISCHE STR 62
44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.38

# நாலுபேர் அப்படிக் கதைக்கினம்



மாதவி

என்ன ஊரில பெரி வீடு கட்டுப்படுதாம். இஞ்ச வேலை வேட்டி ஒன்றும் இல்லை எப்படி உன்னாலை கட்டமுடியுது? சோசல் காசில் மிச்சம்பிடித்து அதை பிறகு வட்டிக்குகொடுத்து, சீட்டுகளும்போட்டு அதிலும் ஏதோபுரளிபண்ணி, உன்னுடைய அப்பா அம்மாவிற்கு இங்க கொடுகிற காசிலும் சுத்தித்தான் ஊரிலை பெரிய வீடு ஒன்று எழும்புது என்று நாலுபேர் கதைக்கினம் தம்பி.

இந்த தம்பி கொஞ்சம் அந்த இடத்தில் அழுத்தமாக வரும். அதன் அர்த்தம் நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை என்பதை சொல்வதற்கான அழுத்தம்தான் அது.
உண்மையில் இந்தபேச்சில் நாலுபேர் கதைகிறார்கள் அவர்கள் யார் என்று தேடினால் அவர்கள் யாவரும் சொல்பவருக்குள் வசிப்பவர்களாகவே இருப்பார்கள்.
அந்த நாலுபேரும் இவரேயன்றி வேறு எவரும் கிடையவே கிடையாது.
தனது கருத்தை நாலுபேருக்குபின்னால் மறைந்து நின்று சொல்லும் ஆசாமிகள் இவர்கள். இவர்களுக்காக நீங்கள் உங்கள் நடையை ஏன் உடையைத்தன்னும் மாற்றவேண்டியதில்லை. நீங்கள் ஒரு முறை மாறினால் போதும், அவர்கள் இலவச அலோசகர்களாக உங்கள் வாழ்நாள் முழுவதும் வருவார்கள். நீங்கள் நீங்களாகவே வாழமுடியாது.

இந்த நாலுபேர் சங்கதியை எமக்கு வெளியில் இருந்து வந்து எவரும் சொல்லித்தரவில்லை. எங்கள் வீட்டில் அம்மா அப்பா அன்று சொல்லித் தந்ததுதான் இந்த நாலுபேர் சொல்லுகினம் என்ற கதை..
பிள்ளை நீ சோதனை பெயில்விட்டால் நான் தெருவில் தலைகாட்டமுடியாது. நாலுபேர் நாக்கை பிடுங்கிங்கிற மாதிரி "வாத்தியாற்றை பிள்ளை நாலுபாடம் பெயிலாம்" என்று சொல்லுவினம்.

ஆனால் இந்தக்கத்தலுக்கு பின்னால் பிள்ளை படிக்காமல் விட்டுவிட்டால் என்ற பயம் மறைந்து இருக்கும். ஆனாலும் அப்பா அம்மாவை இழுக்காது நாலுபேரை இழுத்து அவர்கள் கேள்விகேட்பார்கள் அது தனக்கு கேவலமாக இருக்கும் என்று முடிப்பார்கள்.

மேல் சொன்ன ஊரில் பெரிய வீட்டு கட்டும் கதை கதைக்கும், பிள்ளை படிக்காவிட்டால் நாக்கைப்பிடுங்கிற மாதிரி கேள்வி கேட்பினம் என்றதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த நாலுபோர் மட்டும் எங்கும் வருவினம்.

இப்படித்தான் வெளிநாட்டில் நடந்த திருமணம் ஒன்று. தாய் தந்தையர் பேசி திருமணம் செய்த காலம் இல்லை. இப்போது அவர்கள் பேசி முடித்து தாய் தந்தையருக்கு சொல்லும் காலம். அது சரியும்கூடத்தான். அவர்கள்தானே வாழப் போகிறார்கள்.
முன்பு எங்கவீட்டுக்கல்யாணம். எல்லோரும் தங்கள் வீட்டுக் கல்யாணம்மாதிரி பறந்து கட்டி வேலை செய்வார்கள். ஊரிலை கல்யாணம் என்றால் கொழும்பு கண்டி எல்லாம் வெறிச்சோடிப் போய்க்கிடக்கும். எல்லாரும் ஊரில் வந்து நிற்பார்கள். வீடு நிறைய சொந்தங்கள்.

திருமண வீடு என்றால் விழுந்து விழுந்து கவனிப்பார்கள். பருப்பு என்று குரல் கொடுத்தால் பத்துபேர் தூக்குசட்டியுடன் வருவார்கள். பருப்பு போடும்போது என்னதம்பி அப்பா இப்ப எப்படி இருகிறார். நாம் ஒன்றாக படித்த நாங்கள். அப்பாவைக் கேட்டதாகச் சொல்லுங்கள். என்று பருப்போடு பாசமும் கலந்து அவர் மகனின் முகத்தில் அவரின் தந்தையைத் தரிசித்து விருந்தோம்புவார்கள்.











வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 277



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்


சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**

Company No: 8876276


# சர்வதேசத்தை சீண்டிவிட்டுள்ள இராணுவத் தளபதி நியமனம்



– கொழும்பிலிருந்து ஆர். பாரதி –

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையிலான உறவுகளில் மீண்டும் ஒரு நெருடல் ஏற்பட்டிருக்கின்றது. போர்க் குற்றவாளி என இனங் காணப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வாவை இராணுவத் தளபதியாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நியமித்திருப்பதையடுத்தே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நியமனத்துக்கு எதிராக சர்வதேசம் குரல் கொடுக்க, "நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். இராணுவத் தளபதியாக யாரை நியமிக்க வேண்டும் என்பது எமக்குத் தெரியும்" என்ற வகையில் இலங்கை பதிலளிக்க விவகாரம் இப்போது சூடுபிடித்திருக்கின்றது. இலங்கைக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையிலான அறிக்கைப் போர் ஒன்றுக்கு இது வழிவகுத்துள்ளது.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்ற சர்வதேசத்தின் குரலை தொடர்ந்தும் அலட்சியப் படுத்தும் இலங்கை, போர்க் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டுள்ள ஒருவரை புதிய இராணுவத் தளபதியாக நியமித்திருப்பது நிச்சயமாக சர்ச்சையைக் கிளப்பும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு இலங்கை சொல்லும் செய்தி முக்கியமானது. "போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்படாது" என்ற செய்தியை இதன் மூலம், மைத்திரி உரத்துக்குறியிருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும். போர்க் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தப்படாது என்பதுடன், அவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கி கௌரவிக்க தயாராகவுள்ளோம் என்ற செய்தியுமே இதன் மூலம் சொல்லப்பட்டுள்ளது. இது சர்வதேசத்துக்கு விடுக்கப்படும் ஒரு மிகப் பெரிய சவால்.

கடுமையான எதிர்ப்புக்கள் உருவாகும் என்பதையும் தெரிந்துகொண்டே மைத்திரி இந்த நியமனத்தை வழங்கியிருக்கின்றார். இன்னும் நான்கு மாதங்களே ஜனாதிபதியாகப் பதவியிலிருக்கப்போகும் அவர், பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான கோத்தாபாய ராஜபக்ஷவைத் திருப்திப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நியமனத்தை வழங்கியிருக்கலாம். சவேந்திர சில்வா, கோத்தாபாய ராஜபக்ஷவின் நம்பிக்கைக்குரிய ஒருவர். எது எப்படியிருந்தாலும், போர்க்குற்ற விசாரணை, பொறுப்புக் கூறல் என்பன தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சர்வதேச சமூகத்தின் முன்பாக வழங்கிய உறுதிமொழிகளை முற்றாக நலிவடையச் செய்யும் ஒரு செயற்பாடாகவே இதனைக் கருதமுடியும்.

இலங்கையின் அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிப்போரில் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்களும், மனிதாபிமானத்துக்கு விரோதமான செயற்பாடுகளும் இடம்பெற்றிருப்பதை ஐ.நா. கூட உறுதிப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளில் அதிகளவுக்குச் சம்பந்தப்பட்டது இலங்கையின் 58 ஆவது படையணியாகும். இந்தப் படையணிக்குத் தளபதியாக இருந்தவர்தான் சவேந்திரா சில்வா. போரின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக, அவருக்கு எதிராக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருப்பதை உலக நாடுகளும், ஐ.நா. உட்பட மனித உரிமை அமைப்புக்கள் பலவும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. பலருடைய சாட்சியங்கள் மூலமாகவும் இவை உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

இந்தளவுக்குப் பாரியளவில் மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான ஒருவரை மிகவும் உயர்ந்த பதவிக்கு நியமித்திருப்பதன் மூலம், சர்வதேசத் துக்கு இலங்கை சவால் விட்டுள்ளது. இந்த நியமனம் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அளித்த வாக்குறுதியை கேள்விக்குட்படுத்துகிறது.

மனித உரிமைகள் தொடர்பில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய ஒருவரை, எந்த விசா ரணைக்கும் உள்ளாக்க முடியாதளவுக்கு உயர்ந்த பதவி யைக் கொடுத்து கௌரவித்திருக்கின்றது அரசாங்கம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட தீவிரமான கவலைகளை புறந்தள்ளும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, மேற்கு நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் என அனைத்துத் தரப்புக்களிடமிருந்தும் இந்தம் இந்த நியமனத்துக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடுமையான எச்சரிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. "சவேந்திர சில்வாவின் நியமனம், 2009 இல் முடிவுற்ற மிருகத்தனமான மோதலின் பின்னரான, நிலையான நல்லிணக்கத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும். இது மிக உயர்மட்ட அரசியல் சூழலாகும், சில அரசியல் சக்திகள் தேசியவாதத்தை வைத்து விளையாடுவதன் மூலம், அதிக பயன் அடையலாம் என்று கருதுகின்றன" என இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"தெளிவான, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் பதிவுகளில் உள்ள ஒரு ஜெனரல் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதுகுறித்து நாங்கள் மிகவும் கலக்கமடைந்துள்ளோம். இராணுவத் தளபதி, மனித உரிமை மீறல்களைப் புரிந்தவர் என அறியப்பட்டவர் என்றால், இலங்கையுடன் வலுவான இராணுவ ஒத்துழைப்பை ஏற்படுத்தும் போது, நாம் என்ன செய்ய முடியும் என்பதற்கு வரம்புகள் இருக்கும்" என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரித்திருக்கின்றது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரும் இந்த நியமனத்தை கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்.






03ம் பக்கத் தொடர்ச்சி **சர்வதேசத்தை ....**

அமெரிக்காவைவிட, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் தமது அதிருப்தியைப் பதிவு செய்திருக்கின்றன.

இந்த நியமனத்தின் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கை புதிய நெருக்கடியை எதிர்கொள்கின்றது. ஆனால், சர்வதேச ரீதியாக உருவாகியிருக்கும் விமர் சனங்களை நிராகரித்திருக்கும் இலங்கை, அரசாங்கம், உள்நாட்டு நியமனங் களில் வெளித்தரப்பின் தலையீடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதது என, அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இலங்கையின் கடும்போக்கு சிங்கள அரசியல்வாதிகளும் சர்வதேச சமூகத்தின் கருத்துக்களுக்கு எதிராக கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துவருகின்றார்கள். இதன்மூலம் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கைக்கும் இடையில் மோதல் போக்கு ஒன்று உருவாகிவருகின்றது.

"இலங்கையின் பாதுகாப்பிலும் இறைமையிலும் தலையிட அமெரிக்க தூது வருக்கு எந்த அதிகாரமும் இல்லை. இராணுவத் தளபதி நியமனத்தில் அமெரிக்க தூதுவரின் கருத்தை கண்டித்து ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக தமது நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு முன்வைக்க வேண்டும் என விஜயதாச ராஜபக்ஷஎம்.பி பாராளுமன்றத்தில் கர்ஜித்திருக்கிறார். சிங்களக் கடும்போக்குவாதிகளான விமல் வீரவன்ச, உதய கம்பன்பில போன்றவர்களும் அவர்களுடன் இணைந்திருக்கின்றார்கள். ஆனால், அமைச்சர் மங்கள சமரவீர இந்த நிலைப்பாட்டிலிருந்து சற்று முரண்பட்டு யதார்த்த நிலைமையை வெளிப்படுத்தியிருக்கின்றார். "எமது நாட்டின் வெளிவிவகார கொள்கையானது மீண்டும் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் மோதல் போக்கு கொண்ட யுகத்திற்கு திரும்ப கூடாது" என்று எச்சரிக்கை விடுத்திருக்கும் அவர், "எதிலும் யாரும் தலையிட முடியாது என்று கூறும் மனநிலையானது கடந்த நான்குவருட காலசாதனைகளை இல்லாமல் செய்வதாகவே அமைந்துவிடும்" சுட்டிக்காட்டியிருக்கின்றார். சர்வதேசத்துடன் பனைமைப்போக்கில் செல்லக்கூடாது என்பதே அவரது எச்சரிக்கையாக இருக்கின்றது.

அண்மைக்காலமாக இலங்கை விவகாரத்தில் மென்போக்கை கடைப்பிடித்த சர்வதேச நாடுகள், தமது போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவையை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது. பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை நேர்மையாகச் செயற்படும் எனக் கருதிய சர்வதேச சமூகம், அதற்காகத்தான் இரண்டு வருட கால நீடிப்பையும் ஜெனீவாவில் வழங்கியது. பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கு புதிய உபாயங்களையிட்டு சர்வதேசம் ஆராயவேண்டிய அவசரம் இதனால் ஏற்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது.

இந்த இடத்தில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கை முக்கியமானது. "சவேந்திர சில்வாவின் 58 ஆவது படையணியால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிகோரி போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில், அவர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் கட்டமைப்பு மறுசீரமைப்பு என்பன தொடர்பான அரசாங்கத்தின் வாக்குறுதி களை நலிவடையச் செய்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் சர்வதேசத்தின் பங்களிப்புடன் உடனடியாக நீதி வழங்கலுக்கான தீர்ப்பாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அரசாங்கம் அதனைச் செய்யாதவிடத்து ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியிருக்கிறது.

செப்டம்பர் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெறவிருக்கின்றது. சவேந்திர சில்வா விவகாரம் இதன் போது கிளப்பப்படும். இலங்கை தொடர்பில் மாற்றமடையும் சர்வதேசத்தின் போக்கையும் இதில் காணக்கூடியதாக இருக்கும் என்கின்றார்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள். குறிப்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டிருப்பதைப்போல மாற்று வழி ஒன்றையிட்டுச் சிந்திப்பதாகவும் இந்தக் கூட்டத் தொடர் அமையலாம்.

## நாலுபேர்

02ம் பக்கத் தொடர்ச்சி

இப்ப அதெல்லாம் அற்றுப்போச்சு. நான்காம் நம்பரில் நாலுபேர் வந்திருக்கினம் அவர்களுக்கு வடை கொடுங்கோ என்று சொன்னால் வடைவரும். சொந்த பந்தத்தின் வாடையே அங்கு கிடையாது.

ஒரு திருமணத்தில் என்ன உங்கள் மகனின் திருமணத்திற்கு வந்தேன் உங்களைக் காணவே இல்லை. அவ்வளவு கூட்டம் என்றேன். குறை நினைக்காதையுங்கோ நானும்தான் என்ர மகனின் கல்யாணத்தில் மகனைக் காணவே இல்லை என்று நகைச்சுவைப்படச் சொன்னார்.

இது நகைச்சுவையாகச் சொல்லப்பட்டாலும் அது தான் இன்று நடைமுறை என்பதும் உண்மையே. இப்போதும் பேச்சு திருமணங்கள் என்றால் சாதி பார்த்துதான் செய்யப்படுகிறது என்பது வருந்தத்தக்க உண்மையே. ஆனால் இனம் பார்ப்பது கிடையவே கிடையாது.

யேர்மன் போலந்து ஆங்கிலேயர் பிரஞ்சு ஸ்பானியர் என்று (நமக்கு எல்லாம் அவர்கள் ஒரே இனம் அதாவது வெள்ளையர் இனம் அவ்வளவுதான்) யாரை வேண்டும் என்றாலும், திருமணம் செய்யலாம். அங்கே எந்த வித ஏற்றத் தாழ்வும் கிடையாது.

ஒரு நல்ல சகுனம் என்னவென்றால் இந்த ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் நம்மோடு முடிந்துவிடும். இளையவர்கள் மனதில் இந்த ஏற்றத்தாழ்வுகள் அற்றுப் போயக்கொண்டு இருக்கின்றன.

எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை ஏற்றத்தாழ்வு கடுகேனும் இல்லை. இனம் மதம் சாதி கீதி கத்தரிக்காய் என்று ஒன்றுமே கிடையாது என்று சொல்பவர்களும், ஆனால் நாலுபேர் என சொல்வார்கள் அதைத்தான் யோசிக்கிறேன் என்பார்கள். அந்த நாலுபேர் யார் என்று இப்ப உங்களுக்கு புரிஞ்சிருக்கும். அந்த நாலுபேரும் யாருமல்ல அவரேதான்!









Bochum
Lucky Fly Reisebüro
INDIA TOUR
இந்தியாச் சுற்றுலா
இந்தியாச் சுற்றுலா
குழுக்களாகவும், தனியாகவும் செல்லலாம்.
சிறப்பான வாகனவசதிகள்
தங்குமிட வசதிகள் **** HOTELS ***** HOTELS
விசாக்கள் அனைத்தும் சிறப்பாகச் செய்து தரப்படும்.
நீங்கள் விரும்பும் இடங்களை
நீங்களே தெரிவுசெய்து
எமது சிறந்த சேவையில்
மகிழுங்கள்
தாஜ்மஹால் சுற்றுலா
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
Mob:No: 0179 1484 892
தமிழ்நாடு திருத்தலச் சுற்றுலா
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
கேரளா சுற்றுலா
நோய்தீர்க்கும் ஆயுள்வேதம்
Graphic Design Vettimaniy Ltd
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171


TKS BEST FOODS
DORTMUND மாநகரில்
மளிகை உலகின்
BIGG BOSS
5th ANNIVERSARY
ஒரு நாள் மட்டும்!
விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....
05.10.2019
நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்
குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்.....!
BIG SALE ONE DAY
100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான
குலுக்கல் முறையிலான பரிசில்கள்
இலங்கை/இந்தியா
விமானச்சீட்டு
தொலைக் காட்சிப்
பெட்டி
Mixer Grinder
Rice Cooker
புட்டுப் பானை
Aachi
Rabeena
TKS BEST FOODS
TRS
Tilda
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# Young people in the UK





Shahana Asokan

The world around us is evolving constantly. Who we are and what people have been doing in their free time over many generations have changed considerably. What do you like doing? What do you do in your free time? Commonly known hobbies in the UK would include Bird watching, Gambling and Gardening among other things. However, the times are changing and though some people do appreciate the olden forms of leisure, the Millennials have thrown the traditional style out of the fictitious window.



The Millennials live in the moment and expect to make great memories by seeing the world and capturing the essence of the freedom they have with photographs and sharing them across social media. Instagram, Facebook, Snapchat and other social media platforms allow for instantaneous distribution of said pictures. Many young adults will visit the iconic places throughout the UK with their friends or relatives. Places such as the famous theme park Alton towers and historical buildings such as the Big Ben and the Tower Bridge are not only great tourist attractions but also a must visit for all those that reside in the UK. Even if the places themselves may not be entertaining, it's the people that they are with and share their time with that makes the experience worthwhile.

With the advancement of technology and the ease of access to gaming consoles and mobile phones, the number of people that play video games have risen exponentially with well-known games like Fortnite that has driven many youths to the screens. A phenomena not exclusive to the UK, has led to many people going online, and meeting new people all over the world.

Although this from of leisure is frowned upon by some, it is undeniable that the amount of people that come together to enjoy something they all love is great to see and must be something to be encouraged and not disregarded.

For centuries people in the UK, have always socialised over a drink down at their local pub watching the game or catching up with their friends. There are well over 30 thousand pubs and bars in the UK where you wouldn't be able to get through a city without seeing a few dozen of them scattered around the area. Young or old, it is a place where all ages are welcome and come to enjoy themselves with a game of snooker or darts or have a nice meal out with the family. Even with the increase of social activity online, it would be ludicrous to presume that people wouldn't be getting out and about and finding places to meet with others. These places are magnets for people that want to have a good time, to meet new people and have a great shindig.

Playing sports or exercising will always be something that some young people will spend their free time taking part in. Social media and video games can never take away from the sports that have existed for so many years simply because it's in our nature to work and compete to win. A healthy lifestyle would always include physical strain and what better way to do that than playing your favourite sport or enjoying the gym.

Even when the times are changing, people will never change. Socialising or enjoying your time alone will always be accomplished by entertaining oneself with their preferred hobby. Be it gaming or travelling or just meeting with friends, hobbies will always be part of who we are.









நெடுந்தீவு முகிலனின்




ஒருவர் மீது எந்த காரணங்களும் இன்றி நீங்கள் அன்பு வைப்பீர்கள். உங்களுடைய வாழ்க்கையில் எல்லா துயரங்களுக்கும் அதுதான் காரணமாகவும் அமையும்.
நீங்கள் எல்லோரிடமும் உண்மையாக இருப்பீர்கள். உங்களை சுற்றி இருக்கும் உறவுகள் அனைவரும் பொய் வேசம் போடுபவர்களாக இருப்பார்கள்
மற்றவர்களும் உங்களைப் போன்று மனிதாபிமானம் உள்ளவர்கள்தான் என்று நீங்கள் நினைப்பீர்கள்.
இங்கு சுயநலமானவர்கள் தான் நிறைய இருக்கிறார்கள்.



உங்களை தேடிவருபவர்கள் உங்களை நேசிக்கிறார்கள் என்று நீங்கள் உணர்வீர்கள்.
தேவை முடிந்ததும் அவர்களாகவே உங்களை விட்டு விலகிவிடுவார்கள்.

வார்த்தைகள் காயப்படுத்திவிடும் என்று மிக கவனமாக பேசுவீர்கள்.
ஒரு சொல்லினாலே உங்களை கொன்று விடுவார்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட சத்தியத்தையும் வாக்குறுதிகளையும் நம்புவீர்கள்.
நீங்களாகவே ஏமாந்து விட்டு பின்பு கடவுள் மீது பழி போடுவீர்கள்.

நீங்கள் எல்லா உயிர்கள் மீதும் இரக்கப்படுவீர்கள். ஆனால் உங்களை சிறு எறும்பைப் போல் நசுக்கி விடுவதற்கு இங்கு பலர் இருக்கிறார்கள்.
எல்லோரும் மிககவனமாக இருங்கள். இப்போது இந்த உலகத்தில் போலிமனிதர்களே அதிகமாகி விட்டார்கள்.

## என்றைக்கும் பொதுவான சிரித்திரனின் சிரிப்பு!!!














# பேசுவது என்மொழி, கேட்பது உன் மொழி

மும்மொழியல்ல, எம்மொழி வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் பேசலாம் எனும் சாத்தியத்தை இன்றைய தொழில்நுட்பம் உருவாக்கித் தந்திருக்கிறது. ஹோலோபோர்டேஷன் டிரான்ஸ்லேட்டர் நுட்பம் இன்றைய வசீகர அம்சமாய் மாறியிருக்கிறது. ஒரு காலத்தில் புனைக்கதை போல இருந்த விஷயங்கள் ஒவ்வொன்றாய் யதார்த்தமாகிக் கொண்டிருக்கின்றன.




ஹோலோபோர்டேஷன் என்ன என்பதை விளக்க, எந்திரன் படத்திலுள்ள ஒரு காட்சியை நினைத்தாலே போதும். மேடையில் ரஜினியின் ஒளி உருவம் தோன்றி கேள்விகளுக்குப் பதிலளிக்குமல்லவா ? அது தான் ஹோலோபோர்டேஷன் தொழில்நுட்பத்தின் காட்சியமைப்பு. நமது உருவத்தை எங்கிருந்தும், எங்கே வேண்டுமானாலும் தோன்றச் செய்வது தான் இதன் அடிப்படை.

இந்த ஹோலோபோர்ட்டேஷனை இன்னும் வசீகரமாக்கி, தரத்தை அதிகப்படுத்தி, புதிய தொழில்நுட்பங்களை இணைத்து வியக்கவைத்திருக்கிறது மைக்ரோசாப்.ஃட் நிறுவனம். நினைத்த இடத்தில் உருவத்தை தோன்றச் செய்வது மட்டுமல்லாமல், இடத்துக்குத் தக்கபடி மொழியைப் பேசச்செய்வது என நவீனம் புகுத்தியிருக்கிறது.

ஆங்கிலத்தில் ஆற்றுகின்ற உரையை எப்படி ஹோலோகிராம் உருவம் ஒன்று அப்படியே ஜப்பானிய மொழியில் பேசும் என்பதை செயல்படுத்திக் காட்டினார் மைக்ரோசா.ஃப்டின் அஸூர் கார்ப்பரேன் வைஸ் பிரசிடென்ட் ஜூலியா வயிட் அவர்கள். ஹோலேலென்ஸ் 2 எனப்படும் ஹெட்செட்டை மாட்டியபடி, தனது உருவத்தையே மேடையில் ஹோலோகிராமாக தோன்றச் செய்து, அதை ஜப்பானிய மொழி பேச வைத்து கூட்டத்தை வியக்க வைத்தார் அவர்.
செயற்கை அறிவு எனப்படும் ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ட் வெகு வேகமாக அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரைந்தோடிக் கொண்டே இருக்கிறது என்பதை இத்தகைய தொழில்நுட்ப வருகைகள் நிரூபிக்கின்றன.

பிற தொழில்நுட்பங்களை எல்லாம் இப்போது ஆர்டிபிஷியல் இன்டெலிஜென்ட் தன்னோடு அரவணைத்துக் கொண்டு விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.
உதாரணமாக, நாம் டைப் செய்வதை வாசித்துக் காட்டும் (டெக்ஸ்ட் டு ஸ்பீச் )தொழில் நுட்பம். இதை அஸூர் ஸ்பீச் சர்வீசஸ் உருவாக்கியிருக்கிறது. இந்த தொழில்நுட்பமும் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அஸூர் கொண்டு வந்த தயாரிப்பான "அஸூர் டிரான்ஸ்லேட்" தான் இதன் இன்னொரு முக்கியமான நுட்பம். இது கிளவுட் தொழில்நுட்பத்தில் இணைக்கப்பட்டுள்ள மொழி மாற்று மென்பொருளாகும். எந்த மொழியில் பேசுகிறோம், எந்த மொழிக்கு உரை மாற்றப்பட வேண்டும் என்பதைச் சொல்லி விட்டால் மென்பொருளே நமது மொழியை மாற்றித் தரும். இந்தத் தொழில்நுட்பம் தான் ஆங்கிலத்தை ஜெப்பானிய மொழியாக மாற்றியதன் பின்னணியில் இயங்கும் மென்பொருள்.



உன்மொழியில் பேசும் நான்

குறிப்பிடவேண்டிய வியப்பூட்டும் அம்சம் என்பது "நியூரல் டெக்ஸ் டு ஸ்பீச் " தொழில்நுட்பம் தான். இது தான் வெறுமனே உயிரற்ற வகையில் மொழி மாற்றம் செய்யாமல், நாம் எப்படிப் பேசுவோமோ அதே குரலில், அதே உச்சரிப்பில், அதே அழுத்தத்தில் உரையை மாற்றுகிறது. சொல்லப்போனால் நாமே முன்னின்று பேசுவது போன்ற ஒரு அக்மார்க் உணர்வைத் தருவது இது தான். இப்போதைக்கு நாற்பத்தைந்து மொழிகளில் பேசுவதற்கான கட்டமைப்பை நிறுவனம் உருவாக்கியிருக்கிறது.

ஹோலோகிராம் உருவத்தை அச்சு அசலாக கொண்டு வருவதற்கு விர்ச்சுவல் ரியாலிட்டியைப் போல 'மிக்சட் ரியாலிடி' பயன்படுத்தப்பட்டுள்ளது. எதார்த்த மான உருவ வடிவமைப்பை மைக்ரோசா.ஃப்ட் நிறுவனத்தின் "மிக்சட் ரியாலிடி கேப்சர் ஸ்டுடியோஸ்" செய்கிறது.
இது உருவாக்கியிருக்கும் எதிர்காலம் வியப்பானது. உதாரணமாக, அமெரிக் காவிலுள்ள ஒரு பேராசிரியர் நடத்துகின்ற பாடம், உலகின் பல பாகங் களிலும் உள்ள மாணவர்களின் இருப்பிடங்களில், அவர்களுடைய மொழியில் அவர் நேரடியாக வந்து பேசுவது போல் அமைந்தால் எப்படி இருக்கும் ?
அந்தக் கனவை இது சாத்தியமாக்கித் தரும்.

வெற்றி மைந்தன்




Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund




# சீரடிக்குச் செல்வது எப்படி?


முன்பின் அறியாத பல முகங்கள் எங்கள் வாழ்க்கைப்பயணத்தில் நாம் துன்பப்படும் நேரம், அல்லது அவசியதேவை ஏற்படும் பொழுதுகளில் எமக்கு துணைசெய்துவிட்டு போய்விடுவார்கள். சின்னச் சின்ன உதவியாகக்கூட இருக்கலாம். நீங்கள் நடக்கும்போது உங்கள் கையில் இருந்த திறப்பு நிலத்தில் வீழ்ந்தால் ஒருவர் குரல்கொடுத்து உங்கள் திறப்பு நிலத்தடியில் வீழ்ந்ததைக் காட்டுகின்றாரே அவர் தெய்வமாகலாம்.

கடவுள் படங்களில் வருவதுபோல் முகத்திற்குப்பின்னால் மஞ்சள் ஒளி வட்டம் தெரிய வருவதில்லை. மனிதவடிவில் வருவார். ஏன் பூனையாகக்கூட வந்து குறுக்கே சென்று எம்மை ஒருகணம் நிதானிக்க வைக்கலாம்.

சில செயல்கள் வேடிக்கையாக இருக்கலாம். காலம் நீண்டது. அது வாழ்வில் இவை வாடிக்கை என்பதனைக் காட்டலாம். காலத்திற்கு காலம் கடவுள் மாறவில்லை அவர் எமக்கு உதவ அனுப்பும் குருவானவர்களே மாறி மாறி வருகின்றார்கள். பாடசாலை ஒன்றுதான், ஆசிரியர்கள் காலத்திற்கு காலம் மாறி மாறி வருவதில்லையா? நம்பிக்கைதான் வாழ்க்கை. ஒரு நம்பிக்கையால் ஒருவரது உள்ளம் சாந்திபெறும், மகிழும் என்றால் அது பிறருக்கு எந்தக்கெடுதியும் கொடுக்கவில்லை என்றால் அது நல்லதுதானே

எங்கள் தாய்நாட்டில் வாழ்ந்து வரும் எனது பெரியம்மாவின் மகளே சீரடி சாய் பாபாவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஒன்பது வியாழனும் விரதமும் எடுக்கச் சொன்னார். நான் ஆரம்பத்தில் விருப்பமில்லாமல் விரதம் இருந்தேன். ஆனால் பின்னர் அவர் யார் என்பதை ஆராயத் தொடங்கினேன். இணையத்தளத்தில் பக்தர்கள் கூறுவதை கேட்டு அறிந்து கொண்டேன். அவரைப் பற்றிய விடயங்களைக் கற்றேன். அதன் பின்னர் சாய்பாபா மீது மரியாதையும் நம்பிக்கையும் அதிகரித்தன. அவரின் ஆலயங்களுக்குச் செல்ல ஆசைப்பட்டேன். ஆனால் யேர்மனியில் எங்கு கோயில் என்று தெரியாது.
ஒரு நாள் ஒருவர் என்னைப் பற்றி கனவு கண்டார். அக்கனவில் வந்த சம்பவம், எனக்கு முதல் நாள் நடந்தவை. நான் ஆச்சரியப்பட்டேன். அவருக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் கனவில் கண்டார். அப்போது நான் வட்சப்பில் சாய்பாபாவின் படம் வைத்திருந்தேன். நான் சாய்பாபா பக்தையோ எனக் கேட்டார். நான் ஆம் என்று கூறினேன். உடனே அவர் Am Jugendheim 3 Hückelhoven என்ற இடத்தில் ஆலயம் அமைந்திருப்பதைக் கூறினார். என் மனதில் மகிழ்ச்சி. அப்பொழுது நான் நினைத்தேன் இக்கனவு பாபாவின் அற்புதம் என்று. ஒரு நாள் அக் கோயிலுக்குச் சென்றேன். நாங்கள் வேண்டுவதை ஒரு தாளில் எழுதி வைத்து வணங்கச் சொன்னார்கள். நான் எழுதிய விடயம் எனக்கு நிறைவேறியது.

என் பெரிய ஆசை, கோடை விடுமுறைக்கு என் யேர்மன் நண்பியுடன் இந்தியா, சீரடிக்குச் செல்ல நினைத்தேன். எனது தங்கைக்கு விடுமுறை கிடைக்கவில்லை. அப்போது நான் கூறினேன்: பாபா நினைத்தால், நீ சீரடிக்கு கட்டாயம் வருவாய்! அதேபோன்று என் நண்பிக்கு விடுமுறை கிடைக் கவில்லை.
ஆகவே நான் எனது விடுமுறையை மாற்றி என் தங்கையையும் அம்மாவையும் இந்தியாக்குக் கூட்டிச் சென்றேன். பலர் கூறினார்கள், தனியச் செல்வது பயம் என்று.
மொழி, இடம் வேறு. கடினம் என்றார்கள்.
பாபா மீது நான் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். அதனால் பயமின்றி பயணத்தைத் திட்டமிடத் தொடங்கினேன்.
சென்னையில் இருந்து சீரடிக்கு விமானச் சீட்டை பதிவு செய்தேன்.



றஜினா தருமராஜா

இரண்டு மணிநேரத்தில் சீரடி விமானநிலையம் சென்றடைந்தோம். அங்கிருந்து taxi யில் நாங்கள் தங்கும் இடத்துக்குச் சென்றோம். ஆங்கிலத்தில் உரையாடினோம். அன்பான மனிதர்கள். மொழி தெரியாததனால் உதவிகள் செய்தார்கள். ஆட்டோ ஓடுபவரிடம் 10 ரூபாய் அதிகமாகக் கொடுக்க அவர் அப்பணத்தை வாங்கவில்லை. அவரின் நேர்மை எனக்குப் பிடித்திருந்தது.

ஓர் அழகிய ஊர். வயல்வெளி...ஆஹா... மாதுளம் பழங்கள். பார்க்கவே அருமையாக இருந்தது.நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகாமையிலே ஆலயமும்.எங்கு பார்த்தாலும் சாய் நாதர் பெயர். கடைகளில் சாய் நாதர் பொருட்கள். மிக்க மகிழ்ச்சி.
எந்நேரமும் பக்தர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். அவரைப் பார்ப்பதற்கு பொறுமையுடன் வரிசையில் நின்று சென்றோம். முதல் நாள் என் கண்களில் கண்ணீர். என்னால் உணர முடிந்ததை வார்த்தைகளால் கூறமுடியாது.
இரண்டு முறை ஒரு நாளைக்கு 200 ரூபாய் வழங்கி, நுழைவுச் சீட்டைப் பெற்று, பாபாவைப் பார்க்கச் சென்றோம். கைதொலைபேசி உள்ளே கொண்டு செல்ல முடியாது. 5 ரூபாய் கொடுத்து அதை பூட்டி வைத்தல் வேண்டும்.

பாபா வாழ்ந்த இடம், துவாரகாமாயி, அவர் அணிந்த உடை, அவர் தண்ணீர் எடுத்த கிணறு அனைத்தும் கண்டு மகிழ்ந்தேன். ஒரே இடத்தில் இவை காணப்படுகின்றன.
அனைவருக்கும் உதவுகின்ற உறுதியினைப் பெற்று வந்தேன்.
காணிக்கையும் வழங்கலாம். அன்னதானம் மற்றும் பலவிதமான தானங்கள் கொடுக்கப்பட்டன.

பொறுமை நம்பிக்கை இவை இரண்டும் பாபாக்கு மிகவும்முக்கியமானவை. வியாழக்கிழமைகளில் விருப்பமின்றி சைவம் உண்ட நான் தற்போது விருப்பத்துடன் சைவம் உண்டு வருகின்றேன். நெய்விளக்கும் ஏற்றி வருவதனால் இவ்விளக்கின் ஒளி என் மனதுக்கு வெளிச்சத்தைத் தருகின்றது. சாய்பாபா என் வாழ்வில் வந்த ஒளி போல.



# மாதவிடாய் நிற்றல்

## வாழ்க்கைச் சக்கரத்தின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி



**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

அந்தப் பெண் பயந்தடித்துக் கொண்டு ஓடி வந்தாள். மாத விடாய் வர வேண்டிய தினத்துக்கு வரவில்லையாம். 10 நாட்கள் பிந்திவிட்டதாம். பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். தங்கினால் வெட்கக் கேடு.

இன்னொரு பெண்ணின் பிரச்சனை மிகவும் அந்தரங்கமானது. கணவனுடன் சேர்ந்திருக்க விருப்பமுள்ள போதும், சேர்ந்திருக்கும் போது அவளுக்கு முடிவதில்லை. சற்று வேதனை. பொறுத்துக் கொண்டாலும், கணவனுக்கு இதமாக இல்லை என அதிருப்திப்படுகிறான்.
மற்றொருத்திக்கு மேலெல்லாம் எரிவு, படபடப்பு, பதற்றம், சினம், காரணம் சொல்ல முடியாத வியர்வை, உடல் உழைவு.
இவர்களுக்கெல்லாம் என்ன பிரச்சனை?

இவர்கள் வயது 50க்கு சற்று கூட அல்லது குறைய. மாதவிடாய் முற்றாக நிற்பதோடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்.

முதற் பெண்ணுக்கு சிறுநீர்ப் பரிசோதனை செய்தபோது கர்ப்பம் தங்கவில்லை என்பது உறுதியாகிற்று.

மாதவிடாய் முற்றாக நிற்பதற்கு முந்தைய காலங்களில் இவ்வாறு பிந்தி வருவது சகசம். நாற்பது வயதை அண்டிய காலங்களிலேயே மாதவிடாய் குழப்பங்கள் சிலரில் ஆரம்பித்து விடும். ஆரம்பத்தில் 8 நாள் 10நாள் என முந்தி முந்தி வரும். ஆயினும் நாட் செல்லச் செல்ல பிந்தத் தொடங்கும். 10, 15 நாட்கள் என ஆரம்பித்து 2,3 மாதத்திற்கு ஒரு தடவையென தாமதமாவதுண்டு.

ஆனால் எல்லோருக்கும் அப்படித்தான் நடக்கும் என்று சொல்ல முடியாது. திடீர் என எவ்வித ஆர்ப்பாட்டம் இன்றி நின்று விடுவதும் உண்டு. மோசமான நிலையில் குருதி இறைத்து சத்திரசிகிச்சை வரை போவதும் உண்டு.

எவ்வாறாயினும் 50 வயதுக்கு உட்பட்ட பெண்களில் 24 மாதங்களுக்கும், 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 12 மாதங்களுக்கும் தொடர்ந்து வரா திருந்தால் மட்டுமே மாதவிடாய் முற்றாக நின்று விட்டதென நிச்சயமாகக் கூறலாம். சாத்தியங்கள் குறைவாயினும் அதுவரை கரு தங்காது என அறுதியாகக் கூற முடியாது. இவ்வயதில் கருத்தடை முறையாக ஆண் உறை பாவிப்பது பொருத்தமாக இருக்கும்.

இரண்டாவது பெண்ணுக்கு மாதவிடாய் முற்றாக நின்றுவிட்டதால் உறுப்பின் மென்சவ்வுகள் முதிர்ந்து அவளது பிறப்புறுப்பு சற்று இறுகிவிட்டது. அத்துடன் அதற்கு ஈரலிப்பையும் வழவழுப்பையும் தரும் சுரப்பிகளின் செயற்பாடு குறைந்ததால் வரட்சியாகி விட்டது. இதனாலேயே உறவு சுகமாக இருக்கவில்லை.
இதற்காக கணவனும் மனைவியும் கடுகடுப்பாகி சினத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. வரட்சியையும், இறுக்கத்தையும் தணிக்கக் கூடிய கிறீம் வகைகள் இருக்கின்றன. இவற்றை உபயோகிப்பதின் மூலம் குடும்ப வாழ்வில் மீண்டும் வசந்தம் வீசவைக்கலாம்.

மூன்றாவது பெண்ணுக்கு ஏற்பட்ட வியர்வை, பதற்றம், படபடப்பு, தூக்கக் குறைவு, முதலானவை மாதவிடாய் நிற்கும்போது நிகழும் ஹோர்மோன் குறைபாடுகளால் ஏற்படுவது. நோயாளிக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கும் இவ்வறிகுறிகள் வீட்டில் உள்ள ஏனையவர்களால் பொதுவாக உணரப் படாதவை.

"என்ன சின்ன விசயங்களுக்கெல்லாம் பெரிய குரல் பண்ணுகிறா" என அவர்களை எண்ண வைக்கும்.

தினசரி உடற்பயிற்சி, தியானம், சுவாசப் பயிற்சி, குளிர்ச்சியான சூழல் போன்றவை இவ்வறிகுறிகளைத் தணிக்க உதவும். Evening primrose oil, Soya, மற்றும் சில கிழங்கு வகைகளிலிருந்து பெறப்படும் இயற்கை பொருட்கள் அவ்வறிகுறிகளைத் தணிக்கின்றன என நம்பப்படுகிறது.

இவற்றால் முடியாதபோது ஹோர்மோன் மாத்திரைகளை சில காலம் உட்கொள்ள வேண்டி வரலாம்.
மாதவிடாய் முற்றாக நிற்றல் என்பது ஒரு நோயல்ல. வாழ்க்கைச் சக்கரத்தின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி. ஆயினும் அதன் போது ஏற்படும் உடல் ரீதியானதும், உளரீதியானதுமான பல மாற்றங்கள் சில பெண்களுக்கு மிகுந்த துன்பத்தை அளிக்கின்றன. மேற்கூறிய மாற்றங்களைத் தவிர சிறுநீர் சம்பந்தமான சில பிரச்சனைகளும் மிகுந்த இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன.

அடிக்கடி சிறுநீர் கழித்தல், இரவில் இதற்காக அடிக்கடி எழும்புவதால் தனதும், வீட்டில் உள்ளவர்களினதும் தூக்கத்தையும் குழப்பல், சிறுநீரை அடக்க முடியாமல் தன்னிச்சையின்றிச் சிந்துதல், இருமும்போதும், தும்மும் போதும், முக்கும்போதும் தன்னையறியாது சிறுநீர் சிந்துதல் போன்றவை சில்லறைப் பிரச்சனைகள் போல் தோன்றினாலும், நோயாளிக்கும் வீட்டினருக் கும் சிரமங்களையும் மனவிரிசல்களையும் ஏற்றப்படுத்தக் கூடியளவு சிக் கலானது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

எலும்புத் தேய்வு (Osteoporosis), இருதய நோய்கள் போன்ற வேறு சில பாதிப்புகளும் மாதவிடாய் முற்றாக நின்றபின் பெண்களுக்கு வருவதற்கான சாத்தியங்கள் அதிகம். தலை முடி உதிர்ந்து மென்மையாகி சோபை இழப்பது மாதவிடாய் நின்ற பின் ஏற்படும் மற்றொரு பிரச்சனையாகும்.

"வயதாகிவிட்டது. என்ன செய்வது? போறமட்டும் இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்" என விரக்தியோடு வாழ வேண்டிய தில்லை. பெண்ணாய்ப்பிறந்த பாவம் என கழிவிரக்கம் கொள்ள வேண்டிய தில்லை. நீங்களும் மற்றவர்கள் போல மகிழ்வோடு வாழலாம். வசந்தங்கள் மீண்டும் வரும்.

இவற்றைக் குணமாக்க மருத்துவம் இருக்கிறது. ஒரு சிலவற்றை முற்றாகக் குணமாக்க முடியாவிட்டாலும் பிரச்சனைகளின் தாக்கங்களைத் தணித்து நலமாகவும் மகிழ்வாகவும் வாழ வழிகள் இருக்கவே செய்கின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான். தயக்கத்தை விட்டு உங்கள் பிரச்சனைகளை மருத்துவருடன் வெளிப்படையாகக் கலந்துரையாடுங்கள். வெளிப்படையாக என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.




Münster நகரில்... 0179 2310 560
Mo-Sa 9.00-20.30
JAFFNA Supermarkt
Jaffna Super markt
Lebensmittel aus Asien, Afrika, China und Orient
GRAND OPENING
Münster நகரில்...
31.08.2019 சனிக்கிழமை
மங்கலகரமான ஆரம்பம்
wolbecker Str.16 a
48155 Münster
பசுமையான மரக்கறிகள், கடல் உணவுப்பொருட்கள்
மற்றும் மளிகைப் பொருட்கள், அனைத்தும்
தரமாகவும், மலிவாகவும், பெற நாடுங்கள்
ஒரே கூரையின் கீழ்
நமது சேவை
Lido a Casa
Café · Bar · Pizzeria
தரம் சுவை இவை
என்றும் நம்மிடம்
Lido a Casa
Café · Bar · Pizzeria
Mo-Sa 11.30-15.00 und 17.00 -23.00
So und Feiertag 11.30 - 23.00
Lido a Casa
Pizza Service
Tel.: 02 51 / 2 00 60 51
wolbecker Str.16 a
48155 Münster
தரமான சுவையான உணவுக்கு நாடுங்கள்

# மௌனத்தின் பேராற்றல்





கரிணி

மோனமே மௌனம் ஆகும். மோனமே தவம் எனப்படும். இது அமைதியாக வாய் மட்டும் பேசாதிருத்தல் மட்டுமல்ல. எண்ணங்கள் அமைதியடைந்து எண்ண நெரிசல்களிலிருந்தும் ஓய்வாக அமைதியாக இருத்தலைக் குறிக்கும். உணர்வு சார்ந்ததே மௌனம் எனக் கூறலாம். பேரண்டத்தின் இயல்பும் மௌனமே. மௌனத்தில் செயல் இல்லாவிடினும் கவனித்தல் மட்டும் அங்கு நிகழும். விழிப்புணர்வு நிலை என்றும் கூறலாம். விழிப்புணர்வற்ற மௌனம் தூக்கமாகிவிடும். எமது முன்னோர்கள் மாதத்தில் ஒரு நாளாவது மௌன விரதத்தை கடைப்பிடித்து வந்ததோடு அதை பின்பற்ற வலியுறித்தியும் உள்ளனர். சுய கட்டுப்பாடு, ஒழுக்கம், சாந்தம், மன்னிப்பு போன்ற உயரிய பண்புகளை மௌனமே இலகுவில் கற்றுத் தந்துவிடும். அதனை சிறிது விரிவாக்கி பார்ப்போம்.

எண்ணங்களுக்கெனவே கரு மையம் ஒன்று உள்ளது. விழிப்பு நிலையில் எத்தனையோ தேவையான தேவையற்ற எண்ணங்களும், மற்றும் தூக்க நிலையில் விரும்பியபடி ஆதிக்கம் செலுத்த முடியாத கனவுகளின் நெரிசல்களாகவும் எண்ணம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. இதன் செறிவை கனவுகளே வெளிப்படுத்தும். ஆனால் அதிகப்படியான கனவுகள் தூக்கத்திலிருந்து விழித்தெழும்போது நினைவில் நிற்பதில்லை. அதே நேரம் மனதில் அடக்கி வைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் மனதை பாதித்த விடயங்களைக்  கனவுகளே காட்டிக் கொடுத்துவிடும்.

அழுக்கடைந்த நீரை பல முயற்சிகளால் சுத்தப்படுத்த முனைவதை விட அதை அப்படியே அமைதியாக விட்டால் நீர் தானே தெளிந்துவிடும். அதுபோல் மனதில் நிறைந்திருக்கும் குப்பைகளை கிளறிக்கொண்டிருந்தால் அவை மீண்டும் மீண்டும் மேலெழுந்து புதிய கிளைகள் விட்டு வளர ஆரம்பிக்கும். மௌனமாக நடப்பதை ஒரு சாட்சியாக கவனித்துக் கொண்டிருந்தாலே போதும். குப்பைகள் காணாமலே போய்விடும்.

பலர் தம்மை சுற்றி என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாமல் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருப்பர். அப்போது மனம் அதி தீவிரமாக வேலை செய்கிறது என்று பொருள். எண்ணமற்று இருத்தல் மரணத்திற்கு ஒப்பானது அவற்றை ஒழுங்கு படுத்த முடியும்.  தேவையான எண்ணங்களுக்கு சக்தியூட்டி வெற்றியை நோக்கி செயற்படுத்துவதற்கு எண்ணங்களை குறைத்தலே முதற்படி.

எண்ண அலைகளில்

பீட்டா,

நொடிக்கு 14 சைக்கிள் அலை சுற்றக்கூடியது. துருதுருப்பான நிலை. ஆழ் மனதோடு தொடர்பு பட முடியாத நிலை.

அல்பா

8 தொடக்கம் 13 சைக்கிள் அலை

அமைதியான ஆழ் மனதோடு தொடர்புபடக்கூடிய நிலை.  இதற்காகவே தியானங்கள் மேற்கொள்ளப்படுகிறது.

டெல்ட்டா

மனதை கரைத்த நிலை.

ஆழ்மனதை ஆளும் நிலை.  பேரண்டத்தோடு பேரறிவோடு தொடர்புபடக்கூடிய நிலை.

முக்தி நிலை.

சாதாரண நாட்களில் மூளை இருபது அலைகள் வரை பெற்றிருக்கும். மௌனத்தில் தனக்குள் தானே பேசிக் கொண்டிருக்கும் மனமானது நாளடைவில் உள் நோக்கி திரும்பிவிடும் பின் சக்தி உள் நோக்கி செலுத்தப்படும். பேரண்டத்திற்கும் எமக்குமான தொடர்பு ஊடகம் மௌனமாகும். மௌனத்தின் மூலம் ஆழ்மனதோடு தொடர்பு படலாம்.

மனதை ஒரே அதிர்வலையில் வைத்திருக்கவும் முடியும். மௌனமானது மனது ஆல்பா நிலையில் இருக்க உதவும். இந்த நிலையில் தொடர்ந்து இருந்துவர இலகுவில் பேரண்டத்தோடு நெருங்கிய தனித்துவமான தொடர்பை ஏற்படுத்தி சுய இருப்பை சக்தி வாய்ந்ததாக அமைத்துக்கொள்ள முடியும்.

அத்தோடு மனம் உள்நோக்கி இருப்பதனால் சக்தி உள்நோக்கி பாய்ந்து பெருகி உடற் சக்தி மையங்கள் என்று சொல்லப்படும் சக்கரங்கள் ஆற்றல் பெற்று உடல் தன்னை தானே சீர்படுத்தும்.

புத்தரின் விபாசானா தியானத்தில் மௌனமே பிரதானமாக கடைப்பிடிக் கப்படுகிறது. விபாசனாவின் அடிப்படை பயிற்சியில் பெரும்பாலும் தொடர்ச்சியாக பத்து நாட்கள் மௌனமாக இருத்தல் அவசியம். அமைதியற்ற மனநிலை ஒரு பாலைவனம் போலவும். பேரண்ட சக்தியானது எப்போதும் உடலில் பாய்ந்து கொண்டிருக்கும்போது பாலைவனத்தில் ஊற்றப்படும் நீர் போலவும் இருக்கும்.



அந்த சக்தியை அமைதியற்ற மனநிலை உறிஞ்சி வீணடித்துவிடும். அமைதியான நிலையில் அந்த சக்தி உடலில் பாய்ந்து சேமிக்கப்பட்டு மாபெரும் சக்தியாக வெளிப்படும். இதற்காகவே விபாசனா பயிற்சியை புத்தபிரான் உருவாக்கியதாக ஓஷோ விரிவாக கூறியுள்ளார்.

ஞானம் தேடுபவர்கள் மக்கள் நெரிசல்களிலிருந்து தப்பி ஓடுவது தமது மௌன நிலையை தக்கவைத்து வெற்றி பெறவே. இருப்பினும் எண்ணங்களின் நெரிசல்களில் இருந்து தப்பித்தல் கடினம். அமைதியாக அதை உற்று நோக்கியே அதைக் கடந்துவிட முடியும் என்கிறது யோக நூல்கள்.

தொடர்ச்சி 14 பக்கம்




கடுகுமணி



# கடவுள் வருவாரா?

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

“கடவுள் எங்களிடம் வருவாரா?” என்று ஒருவர் கேட்டார். “அவர் வருவார். எங்களுக்குத் தேவை ஏற்படும்போது ஏதோ வடிவில் வருவார்.” என்று நம்பிக்கையுடன் மற்றவர் சொன்னார்.

இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது மழை பெய்தது. “கடவுள் வருவாரா?” என்று கேட்டவருக்கு மிக அவசரமான வேலை. மழையோ ஓய்வதாயில்லை. இந்த வேளை இருவருக்கும் தெரிந்த ஒருவர் அங்கு குடையுடன வந்தார்.

அவரிடம் “கடவுள் வருவாரா?” என்று கேட்டவருடைய அவசர வேலை பற்றிக் கூறப்பட்டது. வந்தவர் சொன்னார்: “என்னிடம் இன்னொரு குடை இருக்கிறது. அதைப் பிடித்துக்கொண்டு நீங்கள் போகவேண்டிய இடத்துக்குப் போங்கள்” என்று குடையைக் கொடுத்தபோது “நீங்கள் கடவுள்போல வந்தீர்கள்” என்று “கடவுள் வருவாரா?” என்று கேட்டவர் சொன்னார்.

கணவனை இழந்த ஒரு தாய். அவளும் பிள்ளைகளும் உணவில்லாமல் துன்பப்பட்டனர். இளைய மகன் “அம்மா பசிக்குதம்மா” என்று கூறிச் சுருண்டு போய்க் கிடந்தான். இளைய மகள் வயிற்றைப் பிடித்தபடி தாய் முகத்தைப் பார்த்தாள். மூத்தமகள் “என்னம்மா செய்யலாம்” என்று ஏங்கினாள். தாயோ “பிள்ளை! இனிக் கடவுள்தான் எங்களுக்குச் சாப்பாடு தரவேண்டும்” என்று கூறிவிட்டு நிலத்திலே சாய்ந்தாள்.

அந்த வேளை யாரோ ஒருவர் அங்கு வந்தார். அவர் நிலையை உணர்ந்து தன்னிடமிருந்த உணவில் ஒரு பகுதியை கொடுத்தார். அவரைப் பார்த்து அந்தத் தாய் “ஐயா நீங்கள் கடவுள்போல வந்துள்ளீர்கள.” என்று கூறினாள்.

சென்ற நூற்றாண்டின் சிறந்த தமிழ்க் கவிஞன் பாரதி இக்கட்டான வேளையில் கடவுள் எப்படி வந்து எங்களைக் காப்பாற்றுவார் என்பதை தன்னுடைய கண்ணன் பாட்டிலே,

“மழைக்குககுடை பசிநேரத்து உணவு வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்” என்று பாடினான்.

13 ம் பக்கத் தொடர்ச்சி

# மௌனத்தின்

மகத்தான குணங்கள் மௌனத்திலிருந்துதான் வெளிப்படுகின்றன. அமைதியின் பின்னர் வெளிப்படும் ஒற்றை வார்த்தைக்கு எவ்வளவோ சக்தி அதிகம். சுவாசமே உடலின் ஆதார சக்தியாகும். அமைதியான ஆழமான சுவாசம் தரும் நன்மைகள் எண்ணிலடங்காதவை. பரபரப்பான மற்றும் கோபமான உணர்ச்சிப் பிளம்புகளில் சுவாசம் வேகமாக நடைபெறுகிறது. ஆனால் மனம் அமைதியடையும் போது ஆழமாகவும் ஒரே சீராகவும் இயல்பான சுவாசம் நடைபெறும்.


சுவாசமே மனதை செயற்படுத்துவதால் அமைதி நிலையில் நினைத்ததை அடையும் வல்லமை மனதிற்கு உண்டாகும். சுவாசத்தை வெளியில் விட்டவுடன் உள்ளெடுக்காமல் சுவாசிக்காதபடி உள்ள நிலையில் மனதில் எதையுமே நினைக்க முடியாது. சுவாசம் உள்ளெடுக்கும் போதும் மனம் செயற்படும், உள் நிறுத்தும் போதும் மனம் செயற்படும், சுவாசம் வெளியில் விடும் போதும் மனம் செயற்படும். பொதுவாக எதையாவது கூர்ந்து நோக்க வேண்டியிருப்பின் சற்று அமைதியா இருங்கள் என்று கூறுவதை கேட்டிருப்போம். ஒரு நுண்ணுணர்வைப் பெற மௌனம் இன்றியமையாதது. உடலில் உள்ளேயும் வெளியேயும் உள்ள விடயங்கள் கூட புலப்படும். மனதிலிருந்து சுயத்தை நோக்கிய பயணமே இந்த மௌனம். எம் சுயத்தோடு இலகுவில் பொருந்திவிடவும் முடியும்.

மனதுக்கு சமநிலை தன்மையைத் தந்து இன்பம் துன்பமாகிய இருமைத் தன்மையில் இருந்து விடுபட மௌனம் உதவும், கோபம், குரோதம் விலகி எந்நிலையிலும் அமைதியாக இருக்க முடியும். சக்தி சேமிக்கப்படுவதால் அதிக சக்தி வெளியில் இருந்து பெற்றுக்கொள்ள தேவையில்லை.

எனவேதான் யோகிகள் ஒரு வேளை உண்கின்றனர். பிரார்த்தனைகள், பரபரப்பான வழிபாடுகள் பல காலம் மேற்கொள்வதைவிட மௌனத்தில் அதி விரைவில் அதிக சக்தி பெற்று விடலாம். மற்றும் சுய கட்டுப்பாடு, ஆழ்ந்து அறிந்து சிந்திக்கும் திறன் என்பன மேம்படும். இந்நிலையானது மிகப்பெரும் போர்கள், எதிர்ப்புகள், வன்மங்களையே தகர்த்தெறிந்துள்ளது. உலகின் வெற்றியாளர்கள் பலரும் பெருமளவு மௌனமானவர்களாக இருப்பதை அவதானிக்க முடியும்.





# Religion is faithand faith is religion

Earth is a small particle of the galaxy. Scientists have found many more galaxies recently. We who live in this world live for ourselves and die without yielding anything worth for the life given to us.

Saint Manikavasagar says that man has had several births and finally achieves the human birth. Auvaiyar the great Tamil scholar stated அரிது அரிது மானிடராதல் அரிது.

Many who are redeemed from the cycle birth have had faith in the religion and karmic theory. They understood that whatever we sow is harvested by us. That means whatever deed we do has a positive or negative result.

From the birth of earth the beings followed the law of nature. It is the human who understood the nature worshiped fire, sun, and certain animals like cow and elephant. Soon man developed faith in the leaders, spiritual gurus, saints and Rishis the seers of God- who obtained the knowledge and power of mantras. The mantras led the people to see the form of Gods and their power in form and drew pictures of Gods. Later they made statues out of stones and in other metals and worshipped and consequently built temples for Gods. Each community led by a Godly man/woman or Guru started to follow the path shown by them.
Today we have millions of people following hundreds of religions with faith in their religion.
The religious worship, rites, rituals were gradually introduced.
They became the strength of the religion.
The people who follow a religion honor and respect their language as its the language of their religious leader.



*Bavvatharani Ravindran*
- Nallur

The Hindus believed that the Lord Murugan spelled out in Tamil and therefore Murugan is the God of Tamil. Thus, there are tumultuous religions in this small planet. In a community which follows Hinduism we can find their religious faith in many forms. They dress according to their Hindu Tamil tradition. Men wear veshti and shawl and national. Ladies wear long skirts and blouses and saree. They wear holy ash and sandal paste on their forehead. Married women wear red Kumkum in the mid point between the eyebrows and wear flower garland on their plaits or kondai.

Hindus follow the almanac for each and every deal at home in the office and at home and in the temple. They follow the best time in a day to begin a work, fix marriage or housewarming ceremony or to lay foundation for a building. They depend on the almanac for harvesting, sowing, conducting functions and festivals.

The faith in the Hindu religion is found in the belief the people have in astrology and astronomy too. If people do not follow their religious path and do not have faith in their religion, they go on changing from one religion to another and mess up their lives by not achieving the target of human birth. Those who follow their religion with faith attain the boon of attaining Mukthi and finding the end of their birth cycle in this birth itself.

---







ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய பிரதம குரு

## யேர்மனியில் சர்வதேச மதகுருமார்கள் கலந்து கொண்ட பெருவிழா

யேர்மனியில் லின்டா நகரில் 21,22.,08.2019 )125 நாடுகளில் இருந்து சர்வதேச மதகுருமார்கள் கலந்து கொண்ட பெருவிழாநடைபெற்றது. இவ்விழாவில் யேர்மனி கம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பிரதிஷ்டகலாநிதி பாஸ்கரக்குருக்கள் கலந்து சிறப்பித்தார். பல மத குருமார்கள் கூடிய சங்கமம் ஒன்றே கடவுள் ஒருவனே தேவன் எனும் தமிழர் பொன்மொழியை வழிமொழிந்தது



வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யேர்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

19 வருட சிறந்த அனுபவம்
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de




Frankfurt நகரில்....
Jaffna Bazar
Jaffna Bazar
உங்கள் பழைய நகைகளைத் தந்து
2019 ஆண்டின் புதிய டிசைன் நகைகளைப் பெறுங்கள்!
தங்க நகைகள்
தரமானவை மட்டும்
என்றும் எம்மிடம்
கிடைக்கும்
KADHIR
Laila
Basmati Rice
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்
Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com
0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425

# எம்.ஜி.ஆரின் மக்கள் பார்வை




உலகத்தில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் முதலிடம் விவசாயத்துக்குத்தான். உயிர் வாழ அத்தியாவசியத் தேவை உணவுதானே?

அந்தப் பெருமைக்குரிய தொழிலைச் செய்யும் விவசாயப் பெருமக்களின் உயர்வைச் சிறப்பாகப் பாடலில் வார்த்தெடுத்த பெருமை கவிஞர் மருதகாசியைச் சேரும். 1967 தீபாவளித் திருநாள் அன்று, தேவர் பிலிம்ஸ் தயாரிப்பில் வெளியான 'விவசாயி' படத்தில் இடம்பெற்ற பாடல்தான் அது. காதுக்கு ரம்மியமாகக் குறைந்த வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தி (ஒரு டேப், தபலா, புல்லாங்குழல் - இவ்வளவுதான்) பாடலின் தரத்தையும் தனது பொறுப்பையும் உணர்ந்து, இந்தப் பாடலை அமைத்துத் தந்திருக்கிறார் 'திரையிசைத் திலகம்' கே.வி. மகாதேவன்.
பாடியிருப்பவர் டி.எம்.சௌந்தர்ராஜன் எனும்போது பாடலின் சிறப்பைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? கடவுள் உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழிலைத் தந்திருக்கிறார். ஆண்டவனே இந்தத் தொழிலை யாரிடம் கொடுக்கலாம் என்று அலசி ஆராய்ந்து, தேடிக் கண்டெடுத்த தொழிலாளி ஒருவர் உண்டென்றால் அவர்தான் விவசாயி. உயர்வுநவிற்சி அணி நயம் அற்புதமாகப் பொங்கும் ஒற்றை வரியிலேயே விவசாயப் பெருமக்களின் மாண்பை உச்சத்தில் ஏற்றிவிடுகிறார் கவிஞர் மருதகாசி.

'கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி'

கடவுளே கண்டெடுத்த தொழிலாளி எனும்போது அவருக்குப் பொறுப்பு அதிகம்தானே. ஆகவே அவர், ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதற்கான பாதையில் முழுமூச்சோடு நாள்தவறாமல் உழைக்கிறார். பொதுவாக, முத்து எடுக்க வேண்டும் என்றால் ஆழ்கடலில் இறங்கி மூச்சடக்கி உயிரைப் பணயம் வைத்துச் செயல்பட வேண்டும்.

அதற்குச் சற்றும் குறைந்ததல்ல விவசாயப் பெருமக்களின் பணி. இவர்கள் சிரத்தை, கவனம், கடின உழைப்பு. ஆகியவற்றைச் செலுத்தி மண்ணிலே முத்தெடுக்கிறார்கள்! இவர்கள் கண்டெடுத்து அளிக்கும் நெல்மணி, கடல் முத்தைவிடச் சிறந்ததல்லவா? அதைக்கூட உலகத்தார் வாழ வழங்கி விடுகிறார்களே! எப்படி வந்தது இந்த வழங்கும் குணம்? காரணம், அவர்கள் கடவுளே தேடிக் கண்டெடுத்த தொழிலாளி அல்லவா! அவர்களுக்கு இல்லாமல் வேறு யாருக்கு வருமாம் இந்தக் குணம்.?

'முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழுமூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி'

தொடர்ச்சி 39ம் பக்கம்

## ஐரோப்பாவில் வெள்ளி விழாக் கண்ட முதல் பத்திரிகை வெற்றிமணி







as products are available in Star impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Star Impex
Asia & Afro Großhandel
Franziusstrasse 150(Tor 3) - 44147 Dortmund Germany
e.mail:info@star-impex.de Tel: 0231 860 26 96




”நேற்று ஆபீஸ் போயிட்டிருந்தப்போ எனக்கு படபடப்பா வந்துச்சு, வியர்த்துக் கொட்டிச்சு, காலியாயிடுவேன்னு நினைச்சேன். ஒருவழியா ஆபீஸ் போய் சேர்ந்தேன்.நல்ல வேளை மெடிக்கல் டெஸ்ட்ல பிரச்சினை ஒண்ணும் இல்லேன்னு சொல்லிட்டாங்க” என்றான் நண்பன்.

”உடம்பு போட்டுச்சுப்பா.. தொப்பை வேற பெருசாயிட்டே போவுது. டெய்லி காலைல வாக்கிங் போ.. ” என்றேன் கரிசனையுடன். அருகில் நின்றிருந்த என் மனைவி என்னைப் பார்த்த பார்வையில் நக்கலும், கிண்டலும் நாலு கால்ப் பாய்ச்சலில் ஓடித் திரிந்தன. நாலு வருஷமாய் எப்படியாவது என்னை வாக்கிங் போக வைக்கலாம் என கற்ற வித்தை அத்தனையும் மொத்தமாய் இறக்கியும் தோற்றுப் போய் நின்றவள் அவள்.

திரும்பும் வழியில் மனைவி சொன்னார், ”ஊருக்கு தான் உபதேசம். சொல்றது ஒண்ணையும் செய்றதில்லை ” ! கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் அது அக்மார்க் உண்மை என என்னுடைய வாழ்க்கை அனுபவமே கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்கிறது. ஏன்னா சொல்றது ஈசி. அதுல எந்த கஷ்டமும் இல்லை. அட்வைஸ் பார்ட்டிகளை “வாய்ச்சொல்லில் வீரரடி“ எனும் பிரிவின் கீழ் அடுக்கி வைக்கலாம்.

சீக்கிரம் படுத்து தூங்குங்க என பிள்ளைகளை விரட்டும் நாம் தூங்குவதென்னவோ நள்ளிரவை நெருங்கும் போது தான். ராக்கெட் விடுகின்ற வேலை ஏதும் இல்லை, வெட்டியாக தொலைக்காட்சியையோ, ஸ்மார்ட்போனையோ நோண்டிக்கொண்டிருக்கும் வேலை தான். அட்வைஸை விட பயனுள்ளது ஒரு முன்மாதிரி வாழ்க்கை என்பதை நாம் உணர்வதில்லை.

எனக்கு அவ்வப்போது தோன்றும், கடந்த தலைமுறை ஆட்கள் நம்மை அட்வைஸ் செய்து கடுப்படித்ததால் தான் இப்போது நாம் அட்வைஸ் கூடைகளுடன் அலைகிறோமோ என்று. ”அதிகாலையில எழும்பி படிடா... மனசுல நல்லா பதியும்” என அப்பா சொன்னதுண்டு. நான் கேட்டதில்லை. ஆனால் இப்போது அந்த அட்வைஸை பிள்ளைகளுக்குக் கொடுக்கத் தவறுவதில்லை.
ஹெல்தியா சாப்பிடுடா. எதுக்கு இந்த ஜங்க் ஃபுட் எல்லாம் சாப்பிடறே ? காய்கறி, பழம் எல்லாம் தான் உடம்புக்கு நல்லது தெரியுமா ? அதுல என்னென்ன சத்து இருக்கு தெரியுமா ? என நான் அடுக்கிக் கொண்டே போகும் அட்வைஸின் போது அம்மாவின் குரல் மனதில் கேட்கும். ”டேய், இதையெல்லாம் நான் சொன்னப்போ கேட்டியா ?”
ஊருக்கு தான் உபதேசம். நாம் அதில் எதையும் கண்டுகொள்வதில்லை. அல்லது பெரும்பாலானவற்றைக் கண்டு கொள்வதில்லை.

ஒரு காரணம், அட்வைஸ் எளிது. ஒருவர் உதவி நாடி நம்மிடம் வருகிறார் என வைத்துக் கொள்வோம், அவர்களுடைய தேவைக்கு கொஞ்சம் பணம்




கொடுப்பதை விட எளிது நாலு அட்வைஸை கொடுப்பது. அந்த அட்வைஸை வைத்து அவர் என்ன வீடா கட்ட முடியும் ?

இரந்து திரிபவரிடம், ”வேலைக்கு போலாம்ல” என்பதில் தொடங்கி, அலுவலகத்தில், ”இதை அப்படி செய்திருக்கலாம்ல” என்பது வரை அட்வைஸ்கள் நம்மிடமிருந்து புறப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நாம் எப்படி பிறருடைய அட்வைஸ்களை கிழித்துக் காற்றில் பறக்கவிடுகிறோமோ அதே போல தான் நம்முடைய அட்வைஸ்களையும் பிறர் கிழித்துக் கால்வாயில் மிதக்க விடுவார்கள். கடலில் பெய்யும் மழையினால் வேருக்கென்ன லாபம் ?

நம்மிடம் ஒருவர் வந்து எனக்கு இந்த விஷயத்துல கொஞ்சம் அட்வைஸ் கொடுங்க என கேட்டால், காது கொடுத்துக் கேளுங்கள். ”உன் பிரச்சனை உன் பாடு. இதுல எல்லாம் என்னோட அட்வைஸ் கேக்காதே“ என உதாசீனப்படுத்தாதீர்கள். சக மனிதனின் கவலை நமது கவலை எனும் சிந்தனை கொள்ளுங்கள்.
ஒருவேளை ஒருவர் நம்மிடம் அட்வைஸ் கேட்கவில்லையேல், தேவை யில்லாமல் மூக்கை நுழைத்து அட்வைஸை எறியாதீர்.

சரி, அதுவும் எப்படிப்பட்ட சூழல்களில் அட்வைஸ் செய்யலாம் ?

ஒருவர் வந்து, “மட்டன் பிரியாணி பண்ணலாமா, சிக்கன் பிரியாணி பண்ணலாமான்னு யோசிக்கிறேன். என்ன சொல்றீங்க ?” என கேட்டால் நீங்கள் ஆச்சார சைவமாய் இருந்தால் அமைதியாய் இருப்பதே நல்லது. அதை விட்டு விட்டு பத்து நிமிடம் அவரிடம் மட்டன் பிரியாணி புராணத்தைச் சொல்ல ஆரம்பிக்காதீர்கள். இல்லையே, ”நான் தயிர்சாதம் மட்டும் தான் சாப்பிடுவேன். ஆனா என் பிரண்ட்ஸ் எல்லாருக்கும் மட்டன் பிரியாணி தான் பிடிக்கும்” என சொல்லலாம்.

சுருக்கமாக, எது நமக்குத் தெரியுமோ, எதில் நமக்கு அனுபவம் இருக்கிறதோ, அதைப்பற்றிய ஆலோசனைகளை மட்டுமே சொல்லவேண்டும் என்பதை ஒரு அடிப்படை விதியாகக் கொள்ளலாம்.

தொடர்ச்சி 19 ம் பக்கம்






அதேபோல என்னோட ஹெல்த்துக்கு நான் ஏதாச்சும் பண்ணனும். என்ன பண்ணலாம் என ஒருவர் கேட்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். ”டெய்லி காலைல சிரசாசனம் பண்ணுங்க. அப்படியே சர்வாங்காசனமும் முடிச்சுட்டு, சைக்ளிங் போங்க” என உங்களுடைய பட்டியலை ஒப்புவிக்காதீர்கள். வந்து கேட்பவருடைய நிலமை என்ன ? அவருடைய வயது என்ன ? அவருடைய உடல்நிலைக்கு எது தாக்குபிடிக்கும் என பல விஷயங்களை அறிந்து சொல்லுங்கள். அல்லது வேறு ஒரு பயிற்சியாளரை அணுகச் சொல்லுங்கள்.

சுருக்கமாக, உங்களுக்கு ஒத்து வருகிறது என்பதற்காக எல்லோருக்கும் அது ஒத்து வரும் என நினைப்பது தவறு. அனுபவம் இருக்கும் எதையும் அட்வைசாக எல்லோருக்கும் சொல்லவும் கூடாது. அடுத்தவர் பார்வையில் அதை அலசிய பிறகே சொல்லவேண்டும்.

உங்களிடம் ஒருவர் அட்வைஸ் கேட்கிறார் என வைத்துக் கொள்ளுங்கள். அது அவர்களுடைய தேவை சார்ந்த விஷயம் தானே தவிர, உங்களுடைய அறிவு சார்ந்த விஷயம் அல்ல. எந்த நோக்கத்துக்காகக் கேட்கிறாரோ அந்த விஷயத்தைப் பற்றிய அறிவுரைகளை மட்டும் நல்குங்கள். ”ஒரு நாய்க்குட்டி வாங்கலாம்ன்னு இருக்கேன். என்ன பிரீட் வாங்கலாம்” என ஒருவர் கேட்டால் உடனே உற்சாகமாகி நாய்ங்கறது என்ன தெரியுமா ? என கிமு கதைகளை ஆரம்பிக்காதீர்கள். எது தேவையோ அதைச் சொல்லுங்கள்.

சுருக்கமாக, எனக்கு இதெல்லாம் தெரியும் என்பதை வெளிப்படுத்துவதல்ல அட்வைஸ். உனக்கு எது தேவை என்பதைப் பரிமாறுவது மட்டுமே.

ஒருவர் உங்களிடம் ஒரு அட்வைஸ் கேட்டால், முழுமையாய் புரிந்து கொள்ளும் முன் அறிவுரை சொல்ல ஆரம்பிக்காதீர்கள். ஏன் இந்த அறிவுரை ? எதை நிறைவேற்றப் போகிறீர்கள் ? உங்களுடைய இலட்சியம் என்ன ? எதை நோக்கிய பயணம் உனது ? என பல விஷயங்களைக் கேட்டு பின்னர் அதற்குத் தக்கபடி ஒரு பதிலை சொல்லுங்கள். உதாரணமாக ”என்ன படிக்கலாம் ?” என கேட்பவனிடம் ”விமானியாகறதுக்குப் படி” என சொல்வதை விட, ”உன் விருப்பம் என்ன ? உனக்குப் பிடித்தது என்ன ?” என்பதை யெல்லாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். உயரத்தைப் பார்த்தாலே பயப்படுபவனுக்கு மாலுமி ஆவது சரியான தேர்வாய் இருக்காது.

சுருக்கமாக, துப்பாக்கிக்கு உள்ளே நுழைந்து சுடுவதை நிறுத்த வேண்டும். ஒரு அறிவுரை சொல்லும் முன் அறிவுரை கேட்பவரின் நோக்கத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் சில இடங்களில் தோல்வியடைந்திருப்போம். அந்த இடங்களில் எல்லோரும் தோல்வியடைவார்கள் என முடிவு செய்து விடக்கூடாது. சிலருக்கு சில விஷயங்கள் இயல்பாகவே வரும். சிலருக்கு சில விஷயங்கள் சுட்டுப் போட்டாலும் வராது. எனவே நமது தோல்வியின் சுவடை அடுத்தவரின் தலையில் ஆலோசனையாய்ச் சுற்றி வைக்கக் கூடாது.

சுருக்கமாக, அட்வைஸ் என்பது பிறரை உற்சாகமூட்டுவதாய் இருக்க வேண்டும். நமது தோல்வியின் பயத்தையோ, எதிர்சிந்தனையையோ பிறர் மனதில் விதைப்பதாய் இருக்கக் கூடாது.

நம்முடைய உணர்வு நிலையும், பிறருடைய உணர்வு நிலையும் ஒன்றாக இருக்க வேண்டியதில்லை. சிலர் ரொம்பவே சென்சிட்டிவ் ஆக இருப்பார்கள். சிலர் எருமை மாடு கணக்கா இருப்பார்கள்.




இருவருக்கும் ஒரே மாதிரி அட்வைஸ் ஒத்து வராது. உதாரணமாக ”என் மாமியாருக்கு நான் ஒரு பதில் சொல்லணும், அட்வைஸ் பண்ணு” என தோழி கேட்டால் என்ன சொல்வீர்கள் என யோசித்துப் பாருங்கள்.

சுருக்கமாக, கேட்கும் நபருடைய இயல்பு, குணாதிசயம் போன்றவற்றைப் புரிந்தபின் அதற்கான பதிலைச் சொல்வது மிகச் சிறப்பு.



நீங்கள் ஒரு சிறந்த நண்பராகவோ, சமூக ஆர்வலராகவோ, வயது முதிர்ந்தவராகவோ, நிறைய அனுபவம் உடையவராகவோ இருக்கலாம். அதற்காக எல்லாம் தெரியும் எனும் எண்ணம் இருக்கவே கூடாது. சில அட்வைஸ்களுக்கு சிலரை நாடும்படி வைக்க வேண்டும். ”நான் தற்கொலை பண்ணலாம்ன்னு இருக்கேன். எப்படி பண்ணலாம்” என ஒருவர் கேட்டால், அவரை கையோடு கூட்டிக்கொண்டு போய் கவுன்சிலிங்கில் உட்கார வைக்க வேண்டும்.
சுருக்கமாக, எல்லா விஷயத்துக்கும் நாமே அட்வைஸ் சொல்ல வேண்டும் என்பதில்லை. சரியான நபர்களிடம் நாம் அவர்களை அனுப்பி வைப்பது மிகச்சிறந்த செயலாக இருக்கும்.

அதே போல எந்த ஒரு விஷயத்திலும் நாம் சொல்கின்ற அட்வைஸ் மனித மாண்புக்கும், மனித நேயத்துக்கும், அழகான உறவுகளுக்கும் எதிரான ஒன்றாய் இருக்கவே கூடாது. அதன் பெயர் அட்வைஸ் அல்ல. விஷம். அட்வைஸ் ஒருவரை வாழவைக்கும். அவர் சார்ந்த சமூகத்தையும் வாழ வைக்கும். ஆனால் விஷம் ஒருவரை அழிக்கும் விஷமத்தனமானது.

சுருக்கமாக, நமது அட்வைஸ் எதிர்மறை விளைவை எங்கும் உருவாக்கவே கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.
கடைசியாக ஒன்று. நான் இதுவரை எழுதிய எதுவுமே உங்களுக்கான அட்வைஸ் அல்ல. கண்ணாடி முன்னால் நின்று எனக்கு நானே சொல்லிக் கொண்டவை. எனவே தயவு செய்து அட்வைஸ் பிரம்புடன் அடிக்க வராதீர்கள்






25 years ANNIVERSARY
Shashwathi Jagdish
Singer - India
S. Sakthivel
Host - Germany
Noel Trevindren Wilson
Guitarist - Germany
Ajeesh Sivakumar
Hari Kirshnan
Singer - India
Nirmalan & Team
Dancer - Germany
Danasekar
Holland
Kalaru Satheesh
Switzerland
பிரமாண்டமான மேடையில்
PALAZIO
SEP 15 2019 at 2.25 P
SPONS
StaR-Impex
TKS
தமிழர் அரங்கம்
NANDY'S
THUSHI Deko
Jaffna
TS Brothers
ஆசிய சமுத்திரம்
AKR
KIR
FREE ADMISSION
15.09.2019
பிரமாண்டமான அரங்கம் ! பிரமிக்கவைக்கும்




நிகழ்ச்சிகள்! ஆனால் பிரவேசம் : இலவசம் 15.09.2019





# சீனாவில் சிரிப்புப் பயிற்சி

சிரிப்பு அருமருந்து. இன்று உலகில் அருகிப்போகும் மருந்து இந்தச் சிரிப்புத்தான். மனம்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பது உண்மைதான். எனவே நோய்க்கு நாம் வைத்தியசாலை சென்றால் அங்கு எமக்கு உதவும் தாதிகள் எம்முடன் விறைச்ச மூஞ்சியாகப் பழகினால் எங்கள் நோய் எப்படிப்போகும். அதற்கு அவர்கள் எப்படி வேலை செய்யும்போது சிரிக்கமுடியும் என்று கேட்கலாம். முடியும்! வேலை செய்யும் போதும், படிக்கும் போதும், பாயும் போதும், உறங்கும்போதும் காதலை வெளிப்படுத்த முடியும் என்றால்! சிரிப்பு ஏன் முடியாது. நேஸ் எமக்கு பணிவிடை செய்யம்போது இரு கைகள் போதாது. சிலசமயம் வாயிலும் ஒரு துணியைக் கௌவிக்கொண்டு, அல்லது ஒரு காகிதத்தை, குச்சியைப் பிடித்துக்கொண்டு பணிவிடைசெய்ய நேரிடலாம். அந்த தருணத்தில் கூட நோயாளியுடன் சிரிப்பைப் பரிமாறவேண்டும் என்கிறது சீனா.

அதனால் அங்கு வைத்தியசாலைகளில் வேலை செய்யும் நேஸ்களுக்கு வாயில் குச்சியைக் கொடுத்து சிரிப்பு பயிற்சி அளித்துவருகின்றனர். இவர்களுக்கு மட்டுமன்றி பொதுச்சேவையில் ஈடுபட்டுவருபவரும் சீன சுங்கப் போலீஸ் அதிகாரிகளும் தங்கள் பற்கள் நடுவே ஒரு ஜோடி குச்சிகள் வைத்து புன்னகை பயிற்சி செய்துபழகினர். இதன் மூலம் அவர்களது திறன் மேம்படுத்தப்படுகின்றது. மக்கள் சேவைக்கு அறிவும் புன்னகைதவழும் முகமும் முதல்தேவையாக உள்ளது. இந்தச் செய்திக்கு சீனமக்கள் பலதரப்பட்ட கருத்தினை முன்வைத்துள்ளார்கள். சிலர் இது அவசியம் தேவை!மக்கள் மனதிலும் அரசபணிகளில் உள்ளவர் திறனிலம் பாரிய மாற்றத்தைக் கொண்டுவரும் என ஒரு சாராரும். சிலர் காரசாரமாக அரச பணியாளர்கள் சுங்கப்பகுதியினர் யாரும் சிரித்ததை தாம் வாழ்வில்காண வில்லை என்றும் தங்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.









இறைவனின் படைப்பில் ஆண்-பெண் என்றும் சரிசமமானவர்களே. முன்னைய காலங்களில் இந்த இரு பாலரிடமும் பல ஏற்றத்தாழ்வுகள் இருந்துதான் வந்திருந்திருக்கின்றன. உடல்வலு, பொருளாதாரம், சமூகம், மொழி, மதம், சார்ந்து இரு தரப்பினரிடையேயும் பல முரண்பாடுகள் காணப்பட்டாலும் உணர்வு, பசி, ஆசை, அன்பு, காதல் போன்ற பல விடையங்களில் ஒற்றுமை காணப்படுகின்றன. உருவ அமைப்பில் ஆண்-பெண் என வேறுபடினும் உழைப்பு, உண்ணல், சுதந்திரம், உரிமைகள் அனைத்தும் ஒன்றாகவே விளங்குகின்றன.

இன்றைய கணனி தொழில் நுட்பம், விஞ்ஞானம், அறிவியல், கண்டுபிடிப்புக்கள் உயர்ச்சி பெற்றதால் பெண்களும் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் இல்லை என்பதனை நிருபித்து வருகின்றனர். சகல துறைகளிலும் ஆண்களுக்குச் சரிசமனாக உயர்ந்துவிட்டனர். சாதனைப் பெண்களாகப் பிரகாசிக்கின்றனர். இவ்விடையம் பற்றி நிறையவே எழுதலாம். கடந்த மாதம் அதாவது ஆடிமாதம் யோ்மனியில் மிகப்பெரும் பதவிகளில் மூன்று பெண்கள்

Frau. Ursula Von der Leyen (Priesident of the European Commission)

யோ்மனியின் பாதுகாப்புத்துறை அமைச்சராகக் கடந்த ஆறு வருடங்களாகக் கடமை யாற்றிவந்தவரான இவர் 2019 யூலை மாதம் தொடக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவராகப் பதவி ஏற்றுள்ளார்.

7 பிள்ளைகளின் தாயாகிய இவருக்குத் தற்போது 61 வயதாகும். (8-10-1958) பெல்ஜியம் நாட்டில்தான் பிறந்த இவர் சிறுவயதிலேயே தனது குடும்பத்தவர்களுடன் யோ்மனியில் குடியேறி வாழ்ந்து வந்திருக்கிறார். தந்தையாரும் அரசியல், நிர்வாக உத்தியோகத்தராக இருந்தபடியால் இவரும் இத்துறைக்கு கவரப்பட்டார். புÖவவைபெநஜெ ஆüளெவநசஜ டுழனெழெ பல்கலைக்கழகங்களில் படித்து ஆனுஇ ஆீர் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

1990ம் ஆண்டளவில் யோ்மனியின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஊனுரு கட்சியில் சேர்ந்து பல்வேறு துறைகளில் கடமையாற்றி வந்துள்ளார்.
2003 2005 யோ்மனியின் 16 மாநிலங்களில் ஒன்றான நிடர்சக்ஸன் மாநில பாராளுமன்றத்துக்குத் தெரிவாகினார்.
2005 2009 மத்திய அரசுக்குத் தெரிவாகி குடும்பநல, பெண்கள் விவகார அமைச்சராகக் கடமையாற்றினார். 2009 2013 மத்திய அரசில் தொழில் மற்றும் சமூகசேவை அமைச்சராகக் கடமையாற்றினார்.

17.12.2013 17.07.2019 மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சராக அதாவது யோ்மனியின் முதல் பெண் பாதுகாப்பு அமைச்சராகப் பதிவிவகித்துச் சாதனைப் பெண்மணியாகத் திகழ்ந்தார். 23-07-2019 தொடக்கம் 28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவராக அதாவது ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராகப் பதவி ஏற்றுள்ளார். முதலாவது பெண் தலைவராகவும் தன்னைச் சாதனைப் பட்டியலில் சேர்த்துக் கொண்டுள்ளார். நிர்வாகத்திறன் மிக்க இவரின் கடமை உணர்வுக்குக் கிடைத்த வெற்றிப் பதவி எனப் பலர் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

Frau. Annegret Kramp Karrenbauer



**வ.சிவராசா**

யோ்மனியின் 16 மாநிலங்களின் ஒன்றான சார்லண்ட்ஸ் மாநில முன்னாள் முதலமைச்சரும், பிரதான ஆளுங்கட்சியான ஊனுரு கட்சியின் தலைவருமான இவர் கடந்த 24-07-2019 அன்றுமுதல் யோ்மனியின் பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். CDU கட்சியின் தலைவராக இருந்துவந்த தற்போதய யோ்மனிய கான்சிலர் அங்கலா மோ்கல் தனது கட்சித்தலைவர் பதவியை ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்து கடந்த 7-12-2018 தொடக்கம் இவரே கட்சியின் தலைவராக இருந்து வருகின்றார். அதற்கு முதல் கட்சியின் பொதுச் செயலாளராக 26.2.2018 தொடக்கம் 7.12.2018வரை கடமையாற்றியுள்ளார்.

1998ம் ஆண்டு பாராளுமன்றத்தோ்தலில் வெற்றி பெற்று Saarland மாநிலத்தின் முதலமைச்சராக 1999 2018வரை கடமையாற்றியிருக்கிறார். 57 வயதான (9.8.1962) இவர் 3 பிள்ளைகளின் தாயாவர். சார்லண்ட் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம்பெற்றவர்.ஐரோப்பாவின் சனத்தொகையிலும், பொருளாதாரத்திலும் முன்னணி வகிக்கும் யோ்மனி நாட்டின் பாதுகாப்புத்துறை என்பது மிகப்பெரிய பதவியாகக் கருதப்படுகின்றது. அதுவும் ஒரு பெண்மணி இப்பொறுப்பில் அமர்ந்திருப்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். யோ்மனிய வரலாற்றில் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இவர் இரண்டாவது பெண்மணி என்பது சிறப்பான விடையமாகும்.

Frau. Christine Lagarde

63 வயதான (1.1.1956) வயதான கிறிஸ்ரினா லாகராட் பிரான்ஸ் நாட்டவராவர். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். 2 பிள்ளைகளின் தாயாவர். கடந்த 24-7-2019 தொடக்கம் ஐரோப்பிய மத்திய வங்கியின் (ஆளுநராக ) தலைவராகப் பதவி ஏற்றுள்ளார். (President of the European Central Bank) 28 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய மத்திய வங்கியானது யோ்மனியிலுள்ள பிராங்போட் நகரில் தலைமை அலுவலகமாகக் கொண்டுள்ளது. இவர் 2011 முதல் 2019வரை உலக நாணய நிதியத்தின் தலைவராக (ஐவெநசயெவழைெயட ஆழநெவயசல குரனெ) இவர் கடந்த 8 வருடங்களாகக் கடமைபுரிந்துள்ளார். உலகிலுள்ள அதி உயர் பதவிகளில் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது.கடந்த 2005 2007 வரை பிரான்ஸ் நாட்டின் விவசாய, வர்த்தக அமைச்சராகவும் 2007 2011வரை நிதி அமைச்சராகவும் கடமையாற்றி பிரான்ஸ் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றியவர் என்று கூறப்படுகின்றது.யோ்மனியின் இன்றைய வரலாற்றில் அதி உச்ச பதவிகளில் அமர்ந்திருக்கும் இந்த மூன்று பெண்மணிகளும் மிகவும் திறமைசாலிகள் எனப் போற்றப்படுகிறார்கள். இவர்களின் பதவிகளால் யோ்மனியும் ஐரோப்பிய நாடுகளும் வளர்ச்சி அடையம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
ஆண்கள்தான் சாதிக்கப்பிறந் தவர்கள் என்ற சிலரின் கருத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து பெண்களும் சாதிப்பார்கள் என்பதை நிருபித்து வந்திருக்கிறார்கள்.



# 67 வருடங்கள் கடந்த மகாராணி!

இன்று உலகில் பல நாடுகள் மன்னராட்சியில் இருந்துவருவது யாவருக்கும் தெரிந்த விடையமாகும். குறிப்பாக இஸ்லாம் மதத்தைக் கொண்ட பல நாடுகள் இன்றும் மன்னராட்சியிலேயே இருந்துவருகின்றன. பல நாடுகள் முடியாட்சியைத் துறந்து ஜனநாயக ஆட்சிக்கு மாறியிருந்தாலும் இன்று மன்னராட்சியில் அதிகூடிய காலம் இருந்துவரும் நாடாகப் பிரித்தானியா விளங்குகின்றது. 2வது எலிசபெத் மகாராணிதான் இன்று அதிகூடியகாலம் அரசியாக இருந்துவருகிறார். இனி தற்போதய உலகில் அதிக காலம் மன்னர்களாக, அரசிகளாக இருந்து வரும் முதல் ஐந்துபேர் பற்றிய குறிப்புக்களைப் பார்ப்போம்...



No-1- 67 வருடங்கள்

எலிசபெத்மகாராணி-2பெரியபிரித்தானியா-Elizabeth - 2 Großbritannien

இவர் 21.4.1926 திகதியில் பிறந்தவர். தற்போது 93 வயது. 4 பிள்ளைகளின் தாயார். இவர் தான் தற்போது உலகிலுள்ள அரசிகளில் வயது கூடியவர். அது மட்டுமல்லாமல் இவர்தான் உலகில் அதிகூடிய காலம் அரசியாக இருந்துவரும் மகாராணியாவர். இவர் பதவி ஏற்ற காலம் 06.02.1952 தற்போது 67 வருடங்கள் முடிவடைந்துவிட்டன.



No-2- 52 வருடங்கள்

Haji Hassanal Bolkiah - Brunei - புறுனி நாட்டின் அரசன் இவர் 15.7.1946 திகதியில் பிறந்தவர். தற்போது 73 வயதாகும். இரண்டு-மூன்று மனைவிமார். 10 12 பிள்ளைகள். இவர் 4.10.1967 ஆண்டு தொடக்கம் 52 வருடங்கள் புறுனி நாட்டின் அரசராக இருந்து வருகின்றார்.



No-3- 49 வருடங்கள்

Qabus Ibn Said - ஓமான் நாட்டின் அரசன்

18-11-1940 ல் பிறந்த இவருக்குத் தற்போது 79 வயதாகும். 23-7-1970ம் திகதி ஆட்சிக்குவந்த இவர் கடந்த 49 வருடங்களாக இந்த நாட்டின் மன்னராக இருந்து வருகின்றார்.



No-4- 47 வருடங்கள்

Margrethe-2 - டென்மார்க் நாட்டின் அரசி 16.4.1940 திகதியில் பிறந்த இவருக்குத் தற்போது 79 வயதாகும். 2 பிள்ளைகளின் தாய். 14.01.1972 திகதி தொடக்கம் 47 வருடங்களாக டென்மார்க் நாட்டின் அரசியாக இருந்து வருகிறார்.

No-5- 46 வருடங்கள்

Carl xvi Gustaf - சுவீடன் நாட்டின் அரசர்



30.4.1946 திகதியில் பிறந்த இவருக்குத் தற்போது 73 வயதாகும். 3 பிள்ளைகளின் தந்தை 15.11.1973 திகதி தொடக்கம் 46 வருடங்களாக சுவீடன் நாட்டின் அரசராக இருந்து வருகிறார்.

தகவல்:- வ.சிவராசா


வெற்றிமணி வெள்ளிவிழா
15.09.2019 Sunday

பிரமாண்டமான நிகழ்ச்சிகள்
ஆனால் பிரவேசம்

இலவசம்! இலவசம்! இலவசம் !




# இரு இன இல்லற ஊடல்கள்




மேற்கத்தேய உலகில் வளர்ந்து வரும் இளையோர் எங்களுக்கு அன்றாடம் அடையாளச்சிக்கல்கள் தொடர்கின்றன. நட்புகள் புனையவும், காதல் உண்டாகவும், அடையாளங்களின் எல்லைகள் நெருக்கடியாகின்றன. முக்கியமாக கலப்பினக்காதல்களை மீளாய்வு செய்ய, எழுகின்றன கேளவிகள் பல.

புலம்பெயர்ந்த தமிழ்-இளையோர்களிடையே ஒருவருக்கொருவர் காதல் ஈர்ப்பைக் காட்டும்போது, திரைப்படங்களில் காண்பதுபோல் தம்மை காதலிக்க முடியாததுபோல் காட்டிக்கொள்வதும், அதுவே புலம்பெயர்ந்தவர்களிடையே வெள்ளையர்கள் ஈர்ப்பு காட்டிக்கொண்டால் உடனெ மயங்கிவிடுவார்கள் எனவும் இளையர்வகளிடையே சர்ச்சைகள் ஏற்படுகிறது. ஏன் இந்த ஓரவஞ்சனை.

புலம்பெயர்ந்த சமுதாயங்களில் பிறக்கும் குழந்தைகளின் இருமுக வாழ்க்கையில், கரைசேருவதே இலக்காக இருக்கும். தமிழை திறமையாக பேசுவதாலோ, பெற்றோரின் கலாசாரக்கோரிக்கைகளுக்கு இணங்கினாலோ, தமிழ்ப்பக்கம் கரை சேர்ந்த எண்ணம் எம்மிடம்.

கல்வி, தொழில் போன்ற முறைகளில், நாம் திலகங்களாகத் திகழ, குறிப்பிட்ட முறையில் நாம் ஏனோ வெள்ளையர்களிடையே கண்ணுக்கு புலனானாது இருக்கிறோம்.

எமது இனங்களை பற்றி இருக்கும் அவிப்பிராயங்களால், எம்மை வாழ்க்கைத்துணையாக ஏற்க அவர்களுக்குள் எம்மை அணுகத் தயக்கம். நட்பாக இருக்கலாம், ஆனால் வாழ்க்கதுணையாவது யதார்தமாகது என்பதை முகத்துக்கு நேரேயே சிலர் கூறிக்கொள்வார்கள். வெள்ளையர்களுக்கு வாழ்க்கத்துணையாக அங்கீகாரம்பெறாதது, அடையாளச்சமரில் இன்னொரு நெருடலாகிறது.

வெள்ளையர்களிடையே கவர்ச்சியாகத் தோன்றுவது சுயமரியாதையை கூட்டும். தன் காதல்விருப்பத்தை ஒருவா் ஆளும் வெள்ளையினம், ஆளப்படும தமிழினத்திடம் கூற, தமது கவர்ச்சிக்கு ஆதாராமாக அதை எண்ணி, வெள்ளை மேனிக்கள், நீலக்கண்களிடையே என் மேல் ஈர்ப்புக்கொண்ட ஆழும் இனத்திற்கு நன்றியாக இருக்கவேண்டுமோ?

வீட்டுச்சாப்பாடு பிடிக்காத வெள்ளையர்கள், காதல்ருசிக்கு எம்மைத்தேடி வருகின்றனர். அது ஒருமுறை இன்பதிற்கா, வாழ்க்கைத்துணையிற்கா என நினைக்க புதிய விவாதம் உண்டாகிறது. இவ்விடத்தில் அது வேண்டாம்.

## Once you go black, you never go back


ராம் பரமானந்தன்

என் மனதைத் தட்டியது, Once you go black, you never go back, அதாவது ஒரு முறை கறுப்பு நிறத்தை தொட்டால் வேறு நிறம் கேட்காது என்று வெள்ளையரிடையே ஒரு வழக்கமாம். வெள்ளையில்லாத என்மேல், காதல் வருவது, என் மேனிக்காகாவா? இல்லை எனது தனித்துவத்திற்காகவா?. „வெள்ளையர் எம்மை எமது ஒழுக்கத்துக்காகாவும், எமது பண்பாட்டுக்காகவும் தேடி வருகிறார்கள்“ என தமிழர் சொல்கையில், இக்கேள்விகள் எழும்புகின்றன.

ஒருவருக்கொருவர் காதல் வருவது, நிச்சயம் ஈர்ப்பால் தான் என்பதை நான் ஏற்றுக்கொள்ள, எனது இனமும், நிறமும் அந்த ஈர்ப்பின் எத்தனை விகிதத்தை எடுத்துகொண்டது என மீழாய்வு செய்ய என் தனித்துவதை அவமதிப்பது போல் உள்ளது. உனக்கு என்னைப்பிடிக்கிறதா? இல்லை என்னை இன்னொரு தமிழனுடன் பிரதியீடு செய்துகொள்வாயா என்பவை காதல் வாழ்வில் தோன்றும் நியாயமன ஏக்கங்கள்.


திரைப்படங்களில் காண்பதுபோல....

தொடர்ச்சி 26 ம் பக்கம்



25 ம் பக்க தொடர்ச்சி....




எனது கலாச்சாரத்தையும் அதன் விழுமியங்களையும், எனது வேற்றின வாழ்க்கைத்துணையிடம் தொடர விளக்கம் செய்வது சலிப்பான விடையமாகும். Michael அல்லது Michaela வின் இன அடையாளத்தை நாம் கேள்வி ஆக்குவது அரிதாக இருக்க. அவர்களுக்கு நாம் ஆனால் உணவிலிருந்து விருந்தோம்பல் வரை விடை கொடுக்க வேண்டும். எமது பெயர்கள் கூட சரியாக உசசரிக்கப்படாது. இதனால் வாழ்க்கை துணைகளிடையே நிரந்தரமான சமநிலை யின்மை எதிரொலிக்கிறது.

ஆனால் கலப்பினக்காதலின் எதிரிகள், கலப்பினக்காதல்களால் இனவம்சங்கள் அழிந்துவிடுமென்று கூறினால், இரு இனங்களின் மோதலில், பேச்சுவார்த்தைகள் அதிகரிக்கும். ஆரோக்கியமான இல்லற வாழ்க்கைகளில், இருவினங்களின் நன்மைகளையும் எடுத்துசென்று அதன்படி நடக்க வழி உண்டாகும். ஒரே இன குடும்பங்களில் கலாசாரம் ஒன்றே என முடிவாக இருக்க, இருவினக்குடும்பங்களில் எவ்விடத்திற்கும் புதிய முடிவுகள் எடுப்பது கலாசாரங்களை அங்கீகரிக்கிறது. எப்படியிருந்தாலும், நேரமும், பொருளாதார வசதியும் தான், கலாசார அம்சங்களை வீட்டுக்குள் வருவதை நிர்ணயிக்கின்றன. பணத்திரட்டலில் தங்கி இருக்கும் குடும்பங்களில், கலை, கலாச்சார அம்சங்கள் ஆடம்பரச்செலாவாகி அத்தியாவசியமற்றுப்போகிறது.



## எமினத்து ஆண்கள் கொடுக்காத விடுதலையை அங்கு பெற்றுக்கொள்ளலாம்

வெள்ளை ஆண்கள் தமிழ்பெண்களை வாழ்க்கைத்துணையாக ஏற்க, கொலனியல் ஆட்சியை ஞாபாகம் ஊட்டுகின்றது. இன்னொரு பக்கம் எமினத்து ஆண்கள் கொடுக்காத விடுதலையை அங்கு பெற்றுக்கொள்ளலாம் என்ற மூட நம்பிக்கையும் எழுகிறது. தமிழ் ஆண் வெள்ளைப்பெண்ணை வாழ்க்கைத்துணையாக்க, ஏனோ மேற்கத்தேய உலகில நாம் அழகில்லை என்பதை நிர்னயிப்பதுபோல் தெரிகிறது.

வெள்ளையர்கள் எனச சொல்வது, தூற்றுவதற்காக இல்லை, எம்மைப்போன்ற சிறுபான்மைமக்களின் உழைப்பிலேயே ஆழுமினம் ஆகிறார்கள் . கொலனியல் ஆட்சி தொடங்கி, Donald Trump வரை சிறுபாண்மைகள் யாவும் பின்தங்கியே உள்ளன. எதையும் எடுத்துகொள்ளக் கூடிய இனம் எங்களை எடுத்துகொள்ள, தமது மேலாதிக்க நிலையை மீளாய்வு செய்திருப்பார்களோ என்பது இக்கேள்விகளுக்கு என் பதில்க் கேள்வியாகிறது.

## யேர்மனி -சுவேற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயத் தேர்க் காட்சிகள் 28.07.2019







படங்கள் : நந்தபாலன்







# நாமும் இவர்களில் ஒருவரா?



## உங்கள் சிந்தனைக்கு ...



கௌசி

பூமிப்பந்தில் பிறந்த நாம் அனைவரும் பூமியில் அனைத்திற்கும், எப்படியும் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், பூமியில் எமக்கென்று எதுவுமே சொந்தமில்லை என்பதே உண்மை. இதுபற்றி பகவத்கீதையிலே அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. “நாம் எதைக் கொண்டு வந்தோம். எதை இழப்பதற்கு, இன்று எமக்குச் சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாகும். எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ, அது நாளை வேறு ஒருவருடையதாகிறது” வேறு ஒருவருக்குச் சொந்தமாகும் போது அதனை மற்றவர்க்குப் பொருத்தமானதாக விட்டுச் செல்ல வேண்டிய கடமை ஒவ்வொரு மனிதர்களுக்கும் இருக்கின்றது. எமக்காகவே வாழ வந்த நாம் சூழல், சுற்றம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு தனியிடத்தைப் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்தச் சூழல் சுற்றத்தை எப்படி நாம் அமைத்துக் கொள்ளுகின்றோம். அந்தச் சூழலை எவ்வாறு மாற்றியமைக்கின்றோம் என்பதும் சிந்திக்க வைக்கும் விடயமாகும்.

இந்த வாழ்க்கையில் நாம் வாழுகின்ற சமூகத்திற்கு எதனை விட்டுச் செல்கின்றோம். எதனை வழங்குகின்றோம் என்பதுவே நாம் அலச வேண்டிய முக்கிய விடயமாகும்.

நான் என்பதைச் சுற்றியேதான் அனைத்தும் அடங்கியிருக்கின்றன. நான் என்னுடைய குடும்பம், என்னுடைய நண்பர்கள், என்னுடைய அயலவர்கள் என என்னைச் சுற்றி அமைகின்ற வாழ்க்கை பிறருக்குப் பயன்படும், பயன்படுத்தும் பட்சத்தில் சமூக நோக்கு புலப்படுகின்றது. யாரால் அதிக உதவிகள் கிடைக்கின்றதோ. அவர்களிடம் அக்கறையும், பிணைப்பும் இருக்கும் அல்லவா! கிடைக்கின்ற உதவிகளுக்கு ஏற்பக் கொடுக்கும் போதே சமூகஅக்கறை வெளிப்படும். உதாரணமாக ஒரு நாட்டிடம் இருந்து உதவிகள் பெறுகின்ற நாம், நாம் வாழுகின்ற நாட்டிற்கு எம்மாலான உதவிகளை வழங்குவது நியாயம் “நாடென்ன செய்தது உனக்கு என்று கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என்று நினைத்தால் நன்மை உனக்கு” என்று கண்ணதாசன் வரிகளில் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் பாடியிருக்கின்றார்.

வாழுகின்ற வாழ்க்கையில் வளங்களை நாம் பெறுவதைப் பெற்ற இடத்திலேயே வழங்குவதே நியாயம். உதவி செய்வது என்றால், பணம் கொடுப்பது மட்டுமல்ல. உபத்திரவம் செய்யாமல் இருப்பதும் உதவியேதான். உதவி பணத்தால் மட்டும் இருக்க வேண்டியது அவசிய மில்லை. பேச்சால், அன்பால், பரிவால் கூட பிறருக்கு உதவி செய்யலாம்.

வீதியைச் சுத்தம் செய்யும் கடமை அரசாங்கத்திற்குரியது என்றால் அதனை அசுத்தமாக்காது வைத்திருக்கும் கடமை வாழுகின்ற பிரஜைகளுக்கு உரியது. எமது தாயகத்திலே பஸ் வண்டியில் பிரயாணம் செய்கின்ற போது முன் இருக்கையின் பின்புறத்தில் விரும்பியவர்கள் பெயர்களை எழுதுவது, அல்லது எம்முடைய பெயரை எழுதுவது, வாகனத்தில் கீறுவது போன்ற வேண்டாத வேலைகள் செய்து அரசாங்கச் சொத்தை அசிங்கப்படுத்தியுள்ளோம். இதைவிட பஸ் தரிப்பில் வண்டி நிற்கின்ற போது சிறுவர்கள் பொருள்களை (சோளன், கச்சான், கடலை) விற்பதற்காக யன்னலோரம் வருகின்ற போது பேரம்பேசி நேரத்தை வீணடிப்பதனால், அச்சிறுவனால், அவ்வண்டியில் பிறருக்கு விற்க முடியாமல் போகின்றது. அவனுடைய வியாபாரமும் நடக்காது போகின்றது இவ்வாறான சின்னச் சின்னக் காரியங்களை நாம் அசட்டையீனமாகச் செய்வதும் நாம் வாழும் நாட்டிற்கு செய்கின்ற தீமையாகவே அமைகின்றன.

ஆனால், புலம்பெயர்ந்த நாட்டில் இவற்றுக்கான வழி கிடைப்பதில்லை. ஆனால், இங்கு சப்பாத்துக் காலைத் தூக்கி முன் இருக்கையில் நீட்டி வைத்துக் கொண்டு அமர்வது, வீதிக்கு வீதி குப்பைத் தொட்டிகளைக் கண்டு அதற்குள் குப்பைகளைப் போடாது, அருகே நிலத்தில் போட்டுவிட்டுப் போவது போன்ற காரியங்களைச் செய்கின்ற போது இதனைச் சரிப்படுத்துவதற்கு அரசாங்கம் மேலதிக செலவைச் செய்ய வேண்டி இருக்கும் பொதுவாக நெருங்கிப் பழகுபவர்களுடனும், அதிகமாகப் பழகுபவர்களுடனும் எமக்கு அக்கறை அதிகமாக இருக்கும். ஆனால், நாம் வாழும் பூமி, அதில் வாழும் உயிர்கள் என்னும் பொது சிந்தனையுடன் பழகும் போது பரந்துபட்ட மனப்பாங்கு எம்மிடம் ஏற்படுகின்றது. இச்சிந்தனை உள்ளவர்களே, விஞ்ஞானிகள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், அறிவியலாளர்கள், தத்துவ ஞானிகள் ஆகின்றார்கள்.


யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் எமது சொந்த அறிவால் எண்ணிப் பார்க்கச் சொன்ன சொக்கிரட்டீஸ் வார்த்தைகள் போல் வாழ்ந்ததனாலேயே விஞ்ஞானிகளின் வியத்தகு சாதனைகள் வெளிப்பட்டது. பெண்ணடிமையைப் புரிய வைக்க பாரதிக்கு ஒரு நிவேதிதா அம்மையார் தேவைப்பட்டது. பூமியை மற்றைய கோள்கள் சுற்றுகின்றன என்ற பூமி மையக்கோட்பாடு கலிலியோ மூலம் சூரியனையே மற்றைய கோள்கள் சுற்றுகின்றன என்னும் சூரிய மையக்கோட்பாட்டின் மூலம் மறுக்கப்பட்டது. இவ்வாறு சமூகத்தில் மாற்றம் கொண்டு வந்தவர்கள் கூட சமூகப் பற்றாளர்களே.

எனவே சமூகப்பற்றே புதிய கண்டுபிடிப்புகளுக்கும், அறிவியலுக்கும், புதுமைகளுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றன.






# புத்தகங்களின் எண்ணிக்கை அல்ல எண்ணக் கருவே அங்கு முக்கியம்!




பொலிகையூர் ரேகா

## பொலிகண்டி ரேகாவுடன் ஓர் நேர்காணல்

நேர்கண்டவர் : வலன்ரீனா இளங்கோவன்
( ஆசிரியர் தாயக வெற்றிமணி)

தனித்தமிழ்க் கொள்கையோடு தடம் பதித்து வரும் பன்முக ஆளுமை யாளரான பொலிகையூர் ரேகாவுடனான நேர்காணல்

1. உங்களைப் பற்றிக் கூறுங்கள்?
எனது பெயர் ரேகா. அப்பா கோவிந்தராசா, அம்மா உதயமலர், அண்ணா, அக்கா, தம்பி,தங்கை என நான்கு சகோதரர்கள். என்னுடைய தொடக்க நிலைக் கல்வியைத் தாயகத்திலும் உயர்நிலைக் கல்வி மற்றும் பட்டப் படிப்பைத் தமிழகத்திலும் முடித்துவிட்டுத் தற்போது திருச்சியிலுள்ள கல்லூரியொன்றில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றேன். பொலிகையூர் ரேகா என்ற பெயரில் கவிதை,கட்டுரை, சிறுகதை,நாவல் என்பவற்றை எழுதி வருகின்றேன்.

2. உங்கள் பெயரின் முன்புள்ள பொலிகையூர் என்பதன் விளக்கம் குறித்துக் கூறுங்கள்?
யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறையிலிருக்கும் பொலிகண்டி என்னும் ஊரில் பிறந்ததால் "பொலிகையூர்" என்பதை என் பெயரின் முன்பு அடைமொழியாகச் சேர்த்து "பொலிகையூர் ரேகா " என எழுதி வருகின்றேன்.

3. தமிழகத்தில் உங்கள் கல்வி குறித்து?
தமிழகத்திற்கு வந்து உயர் நிலைக் கல்வியிலிருந்து (+1) கற்றேன். பின்பு வரிசையாக இளங்கலை வணிகவியல் (B.com.) முதுகலை வணிகவியல் (M.com.) வணிக ஆய்வியல் (M.phil.) முதுகலை வணிக நிர்வாகவியல் (M.B.A) வணிக நிர்வாக ஆய்வியல் (M.Phil.) ஆகிய பட்டங்களை முடித்துள்ளேன்.

4. உங்கள் எழுத்துலகத் தொடக்கம் பற்றிக் கூறுங்கள்?
பள்ளிக் காலத்திலேயே என்னுடைய எழுத்துலக நுழைவு தொடங்கிவிட்டது. வாசிப்பின் மீதான ஈடுபாடும், சரியான கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான உந்துதலும் என்னை எழுதத் தூண்டியது.

தமிழ்த் தினப் போட்டிகளில் கவிதை, கட்டுரை உள்ளிட்டவற்றில் பங்கு பற்றிப் பரிசுகள் பெற்றதோடு, குடும்பத்தினரின் ஊக்குவிப்பு, சிறந்த ஆசான்களின் வழிகாட்டுதல், தேர்வுகளிலும் கவிதை, கட்டுரை, சிறுகதை எழுதுவதற்கான கேள்விகள் என அனைத்துமே என்னை எழுத்துலகில் கொண்டு சென்றன.

5.உங்களை எழுதத் தூண்டியவை எவை?
கருத்துகளை வெளிப்படுத்தும் எண்ணம். பல அழுத்தங்களுள் தவித்துக் கொண்டிருந்த என் மக்களின் நிலையை வெளிப்படுத்த என்னாலான ஓர் பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் எழுதத் தொடங்கினேன்.

6. உங்கள் படைப்புகள் குறித்துக் கூறுங்கள்?
இதுவரை மூன்று நூல்கள் வெளியிட்டுள்ளேன். 01. குருதிக்காடும் குழலிசையும் (2017)- கவிதைத் தொகுதி 02. மனிதர்கள் காத்திருக் கின்றார்கள் (2018) - சிறுகதைத் தொகுதி 03. சங்க இலக்கியங்களில் காந்தள் (2019)-ஆய்வு நூல் இன்னுமொரு ஆய்வு நூலும்,கவிதைத் தொகுப்பும் பணியிலுள்ளது.

7.உங்கள் படைப்புகளுக்கான கால இடைவெளி குறித்துக் கூறுங்கள்?
என்னைப் பொறுத்த வரையில் ஒரே ஆண்டில் பல புத்தகங்கள் எழுதி எண்ணிக்கைக்கு வைத்துக் கொள்வதை விடச் சரியான கருத்துகளைக் கூறும் புத்தகங்களை வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதே சிறந்தது என எண்ணுகின்றேன். எனவே இதற்கென எந்தக் கால இடைவெளியையும் நான் வகுத்துக்கொள்ளவில்லை. சரியான முறையில் புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்பதே என் விருப்பம்.

8. உங்கள் எழுத்துகளின் கருப்பொருள்கள் எவை?
என் எழுத்துகளுக்கு வரையறை இல்லை. இந்தச் சமூகத்திற்குத் தேவையென்று கருதும் சரியானவற்றை எழுத ஒருபோதும் தயங்கமாட்டேன்.

9. இன்றைய சூழலில் பெண் எழுத்தாளர்கள் குறித்த உங்கள் கருத்து?
பொதுவாக எழுத்தாளர்களின் இன்றைய நிலையென்பது கவலைக் குரியதாகவே உள்ளது.

எதற்கிந்த வீண் வேலை, இதனால் எதைச் சாதித்தாய், செலவு செய்ததில் என்ன கிடைத்தது என்ற விமர்சனங்களைத் தாண்டி எழுதுவதென்பது பெரும்பாலான எழுத்தாளர்களின் சூழலில் கேள்விக்குரியதாய் உள்ளபோது குடும்பம், வேலைச் சுமை, விமர்சனங்கள் என அனைத்தையும் தாண்டி எழுதுவதற்கென நேரம் ஒதுக்கித் தம்மை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் பெண் ஆளுமைகளை எண்ணிப் பெருமிதம் கொள்வதோடு அவர்கள் மென்மேலும் உயர என் வாழ்த்துகளையும் கூறிக்கொள்கின்றேன்.

தொடர்ச்சி 30 பக்கம்









# இலண்டன் வள்ளுவர் !

தனசேகர் பிரபாகரன்




தமிழ் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை மட்டுமே வழங்கப்படுவதில்லை, எல்லைகள் தாண்டி கண்டங்கள் தாண்டி வழங்கப்பெறுகிறாள்.
ஏழ்கடலுக்கு அப்பால் கொண்டு வைப்பினும் தன்மணம் வீசும் தன்மையுடையவள் தமிழன்னை ! தமிழன்னைக்கு உலகெனும் பரந்து வாழும் தமிழர்கள் பெருமை சேர்க்கிறார்கள், அதனால் உலகில் எங்கே சென்றாலும் தமிழர்கள் பெருமைப்படும் விடயங்கள் நிறைந்திருக்கின்றன.

இலண்டன் - பிரித்தானியாவின் ராஜதானி, மேற்குலகின் முகம், தேம்ஸ் நதி தீரத்தில் அமைந்த பிரம்மாண்ட நகரம், நாள்தோறும் உலகின் பல்வேறு இடங்களில் இருந்து தமிழர்கள் உட்பட பல்வேறு மக்கள் வந்து செல்கின்றனர். இதே இலண்டன் நகரத்தின் மையப்பகுதியில் தான் உலகத் தமிழர்கள் பெருமையுற அய்யன் வள்ளுவர் அழகாய் அமர்ந்திருக்கிறார்.
இலண்டன் மாநகர் செல்ல வாய்ப்புக்கிடைத்தது, பிரித்திஷ் அருங்காட்சியகத்தை காண எண்ணி தேடுகையில் வள்ளுவர் சிலை இலண்டன் SOAS பல்கலைகழகத்தின் வாயிலில் நிறுவப்பட்டிருப்பதை பற்றி படித்தேன். கட்டாயம் பார்க்கவேண்டுமென குறித்துக்கொண்டேன்.

ஏன் வள்ளுவருக்கு அத்துணை பெருமை ? காரணம் உலகப்பொதுமறை குறளை தந்த பெருந்தகை அவர். தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங் களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல்.உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தைத் திருக்குறள் வகிக்கிறது. இதுவரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

"இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை
மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்
மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்"

மூவடியில் திருமால் உலகை அளந்தாற்போல் ஒன்றரை அடியிலேயே உலகத்தை தம் கருத்துக்களால் அளந்தவர் அய்யன் வள்ளுவர். பரந்து விரிந்த பிரித்தானிய ராஜதானியின் முக்கிய இடத்தில் உள்ள இந்த பல்கலைக்கழகத்தின் வாயிலேயே மரத்தடியில் நீலமேனியுடன் கம்பீரமாய் அமர்ந்திருக்கிறார் வள்ளுவர் !

சற்றே வளைந்து நெளிந்து செல்லும் சாலைகளினூடே, பரபரப்பான தெருக்களில் நடந்து வந்து பல்கலைக்கழக வாசலை வந்தடைந்தேன், சற்றே நெகிழ்ந்து தான் போனேன், பிறந்து வளர்ந்த சேலத்தின் மையப்பகுதியில் பழமையான வள்ளுவர் சிலை உண்டு, குமரியில் விண்முட்ட நிற்கும் வள்ளுவனைப் பார்த்ததுண்டு ஆனால் இப்படி கடல்கடந்து பிரித்தானியாவில் அமைதியாய் ஒரு மரத்தடியில் நீலநிற மேனியராய் அமிர்ந்திருப்பதைக் கண்டு மெய்சிலிர்ப்புதான்.

அய்யன் வள்ளுவரும் தமிழர்க்கு வானுறையும் தெய்வம் போலவே! குளிரிலும் சற்றே காலணியை கழற்றிவிட்டு அருகே சென்று கையைகூப்பினேன், அருகில் இருந்த வெள்ளைகாரப் பெண்மணியிடம் புகைப்படம் எடுத்து தரமுடியுமா என்று கேட்க, புன்னகையுடன் வள்ளுவரோடு எம்மை ஒரு புகைப்படமும் எடுத்து தந்தார் !
அவர் என்னிடம் கேட்டது ஏன் காலணியை கழற்றினேன் என்று, வையயதுள் வாழ்வாங்கு வாழ்வோரை தெய்வம்போல மதித்து மரியாதை செய்வது தமிழர் மரபென்று சற்றே ஆங்கிலத்தில் சொன்னேன் !
மிகவும் மகிழ்ந்து வாழ்த்துக்கள் சொல்லிச்சென்றார் அந்த பெண்மணி !
இலக்கிய கருவூலமாகத் திகழும் திருக்குறள் உணர்த்தும் உண்மைத் தத்துவத்தில் ஐயம் கொள்ள இடமே இல்லை. தினசரி வாழ்க்கையில் மனிதன் பின்பற்ற வேண்டிய ஒவ்வொரு தகவல்களையும் துள்ளியமாகத் தருகின்ற வாழ்வியல் களஞ்சியம் திருக்குறள். கிரேக்க மக்களுக்குக் ஹோமர் இலியட் போன்றது தமிழருக்கு இத்திருக்குறள்.

குறள் உலகப்பொதுமறை என்று அனுபவத்தில் உணர்ந்தநாள் அன்று !
பாரதி ஏன் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் தந்த தமிழ்நாடு என்று சொன்னான் என்று கண்கூடாய் உணர்ந்த நாளும் அன்றே !



28ம் பக்கத் தொடர்ச்சி

## புத்தகங்களின் எண்ணிக்கை அல்ல...

10. உங்கள் வெற்றிக்கான காரணிகளாக நீங்கள் நினைப்பவை?
என்னுடைய தன்னம்பிக்கை மற்றும் உறுதுணையாக நிற்கும் சில உறவுகளோடு நான் சந்தித்த ஏமாற்றங்கள், துரோகங்கள், வலிகள், அவமானங்கள், வீண்பழிகள்,ஏளனப் பேச்சுகள் என்பனவே என் வெற்றிக்கான காரணிகள்.

11. உங்கள் மீதான பாராட்டுகள், விமர்சனங்கள் குறித்த உங்கள் பார்வை எப்படி இருக்கும்?
தன்னம்பிக்கை துணைக்கொண்டு பெருவலிகளைக் கடந்ததால் பாராட்டு களில் நான் கரைந்து போவதுமில்லை, விமர்சனங்களில் உறைந்து போவதுமில்லை.
பாராட்டப்படும்போது எனக்கான பொறுப்புகள் அதிகரிப்பதன் சுமையை உணர்வேன். விமர்சனங்கள் வந்தால் என் வெற்றிகளைப் பதிலாக்குவேன்.
எனவே விமர்சனங்கள் குறித்தோ, பாராட்டுகள் குறித்தோ நான் அலட்டிக்கொள்வதில்லை. போகும் பாதை சரியானதா என்பது மட்டுமே எப்போதும் என் கவனத்திலிருக்கும்.

12.புலம்பெயர் தேசத்தில் எழுத்தாளராய் இருப்பதன் சிக்கல் என்னவென எண்ணுகின்றீர்கள்?

தாய் மண்ணில் கிடைக்கும் வரவேற்பும் ஊக்கமும் இங்கு சற்றுக் குறைவுதான். புத்தக வெளியீட்டிலே அதிக சிக்கல் உள்ளது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போன்ற நிலைதான். தமிழகத்தில் புத்தகம் வெளியிடல் என்பது சில தாயக எழுத்தாளர்களின் எண்ணமாக உள்ளது. என்னைக் கேட்டால் புத்தகத்துக்கான வரவேற்பு, அங்கீகாரம் என்பன ஒப்பீட்டளவில் தாயகத்தில்தான் அதிகமாக உள்ளது. எழுத்துகளுக்கான அங்கீகாரம்,புத்தக விருதுகளுக்கான பரிந்துரை ஆகியவற்றிற்கு அயல் நாட்டவர் என்ற காரணம் இடையூறாக உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

13.நீங்கள் பெற்ற விருதுகளில் நீங்கள் உவகையோடு கூறிக்கொள்ளும் விருதுகளைக் குறிப்பிடுங்கள்?

எந்தப் பின்புலமுமற்ற என் எழுத்துக்களின் சரியான வாசகர்களின் புரிந்துணர்வும் பாராட்டுதலுமே நான் உவகையோடு கூறிக்கொள்ளும் என் சிறந்த விருதுகளாகும்.

நான் கவிதை,கட்டுரைப் போட்டிகளில் தனித் தனியே வாங்கியவற்றைக் காட்டிலும் என் கல்லூரிக் காலத்தின் ஆண்டிறுதியில் தமிழ்த் திறமைக்காக "டிநளவ ஓசயவழச டை வயஅடை" என்ற பதக்கத்தை புனித சிலுவைத் தன்னாட்சிக் கல்லூரியில் வழங்கியபோது என் தமிழ்த் திறமைக்குக் கிடைத்த பாராட்டாக எண்ணினேன். சிறந்த சமூக சேவையாளருக்கான விருதை "டிநளவ ளழஉயைட ழசபயமெச" திருச்சி சமால் முகமது கல்லூரியின் லியோ அமைப்பினர் வழங்கினர். அதன் பின்பு உலக ஐயைகள் குழுமத்தின் இளம் பன்முக ஆளுமையாளருக்கான "ஐயை எழுசுடர்" விருதினைப் பெற்றுக் கொண்டதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேலும் பல விருதுகளைப் பெற்றிருந்தாலும், ஒவ்வொரு பாராட்டுகளும் ,அடையாளப்படுத்தலும் எனக்கான பொறுப்புகளை அதிகரிக்கும் சுமை என்பதே உண்மையாகும். விருதுகளுக்கான நபர்கள் மாறிக் கொண்டிருப் பார்கள். ஆனால் நமக்கான கடமை எப்போதும் காத்திருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு பயணித்தலே நமக்கு நாம் கொடுக்கும் விருதாகும்.



## உங்கள் நாடு ஆனால்...



நியூசிலாந்திலிருந்து சுற்றுலாப் பயணியாக இலங்கை வந்திருக்கும் இவரது பெயர் ஷெரின்.
நடு மதியம் 2.00க்கு வேலை முடித்து திரும்பும் போது வீதியோரங்களில் குப்பைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த இவரை கண்டதும் மனதுக்குள் அலாரம் ஒன்று அடித்துக் கொண்டது.

பலர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க அவர் அருகே சென்றேன். காரணத்தை அறிய....

அவரது பதில் என்னை சிந்திக்க வைத்தது.
**'இது உங்களது நாடு மட்டுமல்ல எனது உலகமுமாகும்.'**
........சிந்திப்போமா..... ராஜகுமார்.


மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen





# சூரியக் குடும்பத்தின் வேறு ஒரு கோளில் போய் வசிப்போமா?





## Dr.நிரோஷனின் அதிசய உலகம்



ஒரு சிறிய கிராமத்தில் மக்கள் தொகை அதிகரித்தால் என்ன செய்யலாம்? இன்னும் கொஞ்சம் பெரிதான ஒரு ஊருக்கு அல்லது நகரத்திற்குப் போகலாம். அங்கே சென்றும் இடம் இல்லை என்றால் நாடு விட்டு வேறு ஒரு நாட்டிற்குச் சென்று பார்க்கலாம். ஆனால் இப்படி மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போய் நமது பூமியிலே இடம் இல்லாமல் போனால் என்ன செய்யலாம்? நண்பர்களே,

இதை நினைத்து ஒன்றும் பயப்பட வேண்டாம், ஆனால் அப்படி நமது பூமியை விட்டு வேறு ஏதாவது ஒரு கோளுக்குப் போக வேண்டிய ஒரு நிலைமை வந்தால், எங்கே போகலாம்? குறிப்பாக நமது சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் எந்தக் கோளுக்குப் போகலாம்?

இதற்காக பல்வேறு கோணங்களில் விதம் விதமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இனி வருங்காலங்களில் நாம் அதில் வெற்றிகூட காண வாய்ப்புகள் உள்ளன. இது ஒருபுறம் இருக்கட்டும், இதுவரை கிடைத்துள்ள தகவல்களை ஒன்று சேர்த்து நாம் நமது சூரியக் குடும்பத்தில் உள்ள முக்கியக் கோள்கள் அனைத்திலும் முறையான விண்வெளி உடை இல்லாமல் எவ்வளவு காலம் உயிர்வாழலாம் என்பதைப் பார்ப்போமா?

நமது சூரியக் குடும்பத்துக்கே தலை யாரென்று கேட்டால், அது நமது சூரியனே தான். அது ஒரு கோள் இல்லாமல் ஒரு நட்சத்திரமாக இருந்தாலும், அதில் எவ்வளவு நேரம் உயிருடன் வாழலாம் என்று பார்ப்போம். நமது சூரியனை நோக்கிச் செல்லும் பாதையிலேயே நாம் எரிந்து ஆவியாகி விடுவோம், ஏனென்றால் சூரியனிலிருந்து அந்த அளவிற்கு அதிகமான வெப்பம் நம்மீது பாய்ந்துவிடும். ஆட அப்படி என்றால் சூரியனை நெருங்க ஒரு வழியுமே இல்லை என்று யோசிக்கின்றீர்களா? நண்பர்களே, ஒரு வழி இருக்கிறது. பகல் நேரங்களில் போகாமல், இரவு நேரத்தில் சூரியனை நோக்கிச் சென்று பார்க்கலாம், சில நேரம் வெப்பம் குறைவாக இருக்குமோ-)?

சூரியனுக்கு மிக அருகாமையில் இருக்கும் கோள் புதன் அதாவது Mercury ஆகும். இந்தக் கோளில் உள்ள விசேஷம் என்னவென்றால், சூரியனை நோக்கி இருக்கும் கோளின் பகுதி வெப்பமாகவும், சூரியனின் வெப்பம் படாத மற்றப் பகுதி அதிக குளிருடன் உறைந்தவாறு இருக்கும். எனவே, நீங்கள் இந்தக் கோளில் எங்கிருந்தாலும் சரி, அதிக பட்சம் 2 நிமிடங்களில் இறந்துவிடுவீர்கள். அடுத்து வருவது வெள்ளிக் கிரகம் அதாவது ஆங்கிலத்தில் Venus என்று அழைப்பார்கள். இந்தக் கிரகத்தின் ஈர்ப்பு விசை பூமியைப் போலவே இருப்பதால், நீங்கள் பூமியில் நடப்பது போலவே எளிமையாக அதில் நடக்க இயலும்.ஆனால் இதில் ஒரே ஒரு சிக்கல் தான் இருக்கிறது. அப்படி நடப்பதற்கு நீங்கள் உயிருடன் இருக்க வேண்டுமே. ஏன் என்று கேட்கிறீர்களா? வெள்ளியில் வெப்பநிலை எப்படி இருக்கும் தெரியுமா? சுமார் 480 பாகை செல்சியஸ்கும் அதிகமாக இருக்கும். எனவே, சும்மா நடந்து திரிவதற்கு உங்களுக்கு நேரமே இருக்காது, ஏனென்றால் அந்த வெப்பத்தில் உங்களால் ஒரு சில நொடிகள் மட்டும் தான் உயிருடன் வாழவே முடியும்.

சூரியக் குடும்பத்தின் அடுத்த கோள் நமது பூமி தான். நமது பூமி பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்லவே தேவை இல்லை. எனவே, அந்த வரிசையில் அடுத்ததாக வரும் கோளைப் பார்ப்போம். அது செவ்வாய் அதாவது Mars ஆகும். சூரியனில் இருந்து சற்று தொலைவில் இருப்பதால் அங்கு வெப்பம் மிகவும் குறைந்து குளிருக்குச் செல்லும் நிலை இருக்கும். -100 பாகை செல்சியஸ் அளவிற்குச் செல்லும்படியான சூழல்களும் அங்குண்டு. முறையான பாதுகாப்பு உடைகளை உடுத்துக்கொண்டு உங்கள் மூச்சை இறுக்கிப் பிடித்துக்கொண்டு ஒரு கொஞ்ச நேரம் அங்கு நடந்து செல்லலாம்.

அடுத்திருக்கும் கோள் வியாழன் அதாவது Jupiter ஆகும். இந்தக் கோளில் உள்ள விசேஷம் என்ன தெரியுமா? இதில் நீங்கள் தரையிறங்கவே முடியாது ஏனென்றால் வியாழனில் நிலமே கிடையாது. அங்கு வாயுக்கள் அடங்கிய மண்டலம் மட்டும் தான் இருக்கும். நீங்கள் அங்குச் சென்றால் அதன் அதிகப்படியான அழுத்தம் காரணத்தால் நொறுங்கி விடுவீர்கள். எனவே அங்கு உங்களால் சில நொடிகள்கூட தாக்குப்பிடிக்க முடியாது.


சரி அடுத்து இருக்கும் கோளைப் பார்ப்போம். அதுதான் சனி , அதாவது Saturn ஆகும். இந்தச் சனியும் வியாழன் போல் வாயுக்களால் ஆனது. எனவே அதில் நம்மால் நிற்கவே முடியாது. அங்கும் வியாழனைப் போல் அதிகமான அழுத்தம் இருப்பதால் நம்மால் ஒரு சில வினாடிகள் கூட உயிருடன் இருக்க முடியாது. அப்படியே தொடர்ந்து போனால், அடுத்திருக்கும் யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய இரண்டும் வாயுக்கள் நிறைந்து, சூரியனில் இருந்து வெகுதொலைவில் இருக்கும் கோள்கள் ஆகும். இந்தக் காரணத்தால் அங்கும் வாழலாம் என்பதை தற்போது கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது. நண்பர்களே, நமது சூரியக் குடும்பத்தில் தற்போது தெரிந்த அளவிற்குப் பூமியில் மட்டும் தான் மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என்று அனைத்து உயிரினங்களுமே வாழக் கூடிய ஒரு பாதுகாப்பான சூழ்நிலை இருக்கிறது. எனவே நமது இந்தப் பூமியைப் பேணிக்காப்பது நமது கடமையாகும்! என்ன நான் சொல்வது சரி தானே?

சரி நண்பர்களே இனி நீங்கள் கூறுங்கள்? விண்வெளியில் மிகத் தொலைவில் பூமியைப் போல் இன்னும் ஒரு கோள் இருக்கிறது என்று எடுத்துக் கொள்வோம். அங்குப் போய் நீங்கள் வசிப்பீர்களா? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh





INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
மாநகரில்
தமிழர் தெருவிழா
2019
புகழ் பெற்ற பல கலைஞர்கள் சங்கமிக்கும்
மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Straßenfest der Tamilen
07.09.2019
11.00 bis 19.00 Uhr
Rheinische Str.
தமிழர் அரங்கம்
Verein für tamilische Künstler e.V
VMDO
HOUSE OF RESOURCES
TKD
TVS
comdu.it Deutschland
ஊடக அனுசரணை
வெற்றிமணி
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
அகரம்
IBC தமிழ்
GTV
itn
தமிழ் MTV
STS தமிழ் TV
TamilDealz
Lankasri
ETR
tamil.de
0151 633 633 33 | 0157 735 178 49 | 0177 679 4261 | 0162 803 1647 | 0151 27 990 990



# திருமந்திரமும் வாழ்வியலும் 41

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**




முற்காலத்தில் அரசரின் ஆட்சி நடைபெற்றபோது அரசன் எப்படி அரசாட்சி செய்யவேண்டும் என்பதை பல நீதி நூல்கள், சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. அவை இக்காலத்தில் நாட்டை ஆழும் அரசியல்வாதிகளுக்கும் பொருத்தமானதாகும். திருவள்ளுவர் திருக்குறளில் பொருட்பாலில் 1. அரசியல் அதிகாரங்கள் 39 (இறைமாட்சி), 55 (செங்கோன்மை), 56 (கொடுங்கோன்மை), 57 (வெருவந்த செய்யாமை) 58 (கண்ணோட்டம்), 59 (ஒற்றாடல்), 2. அமைச்சியல் அதிகாரங்கள் 64 (அமைச்சு), 65 (சொல்வன்மை), 67 (வினைத் திட்பம்), 69 ((தூது), 70 (மன்னரைச் சேர்ந்தொழுகல்), 71 (குறிப்பறிதல்), 72 (அவையறிதல்), 73 (அவையஞ்சாமை), 3. அரணியல் அதிகாரங்கள் 74 (நாடு), 75 (அரண்), 5 படையியல் அதிகாரங்கள் 77 (படைமாட்சி), 78 (படைச்செருக்கு) ஆகியவற்றில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தில் முதலாவது காண்டம் திருமலைச் சருக்கம் திருநாட்டுச் சிறப்பில் “அரசு கொள் கடன்க னாற்றி ...” எனத் தொடங்கும் 26 ஆவது பாடலில் சேக்கிழார் சுவாமிகள் அந்த நாட்டு மக்கள் தமக்கு வருவாய் வந்ததும் முதலில் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுத்தார்கள் எனக் கூறியுள்ளார்.

மன்னனின் கடமை பற்றி கூறும் திருமூல நாயனார், திருமந்திரம் பாடல் எண் 243

“ஆவையும் பாவையும் மற்று அறவோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே”

நாடாளும் மன்னன் நாட்டில் உள்ள பசுக்களையும், பெண்களையும், அறநெறி உணர்ந்த சான்றோர்களையும், தேவர்களும் வணங்கித் தொழத்தக்க (போற்றும்) தவவேடம் பூண்ட ஞானிகளையும் காக்கக் கடமைப் பட்டவன். இவர்களைக் காக்காது அரசன் கைவிட்டு விடுவானானால், மறுபிறப்பிலும் மீண்டெழ முடியாத நரகத்தை அடைவான்.

இதே கருத்தைக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 238

“கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனின் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே”

கல்வி அறிவில்லாத அரசன், உயிர்களைக் கவரும் எமன் இருவரும் ஒன்றே. இருவருக்கிடையே வேறுபாடில்லை என்பது மட்டுமல்ல, முட்டாள் அரசனைவிட எமன் நல்லவன். அறிவில்லாத அரசன் அறநெறியைக் கடைப்பிடிக்க மாட்டான். நியாயம், அநியாயம் உணர மாட்டான். தனக்குப் பிடிக்காதவர்களை “கொல்” என்று கட்டளை இட்டாலும் இடுவான். ஆனால் எமன் அப்படியல்ல. நல்லவர்களுக்குத் துன்பம் தரமாட்டான்.

அறநெறி காத்தல் அரசர்க்கழகு எனக்கூறும் திருமந்திரம் பாடல் எண் 239

“நாள்தொறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தொறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாள்தொறும் நாடு கெடும்மூடம் நண்ணுமால்
நாள்தொறும் செல்வம் நரபதி குன்றுமே”

அன்றாடம் அரசன் அவனுடைய நாட்டில் அற ஒழுக்கம் கெடாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி அவன் அன்றாடம் அவனுடைய நாட்டில் நீதி முறை சரியாக உள்ளதா என்பதை ஆராய்ந்தறியத் தவறுவானேயானால், அவனுடைய நாடு ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்டழியும். அறியாமை எங்கும் மிகும். செல்வமும் செல்வாக்கும் நாளும் குறைய, அரசனும் அழிவான்.

“அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி” எனக் கூறும் திருமந்திரம் பாடல் எண் 245

“வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாம்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே”

நாடாளும் மன்னன் தன்நாட்டை நன்றாக ஆட்சி செய்து காத்து வருவானானால், அவன் நாட்டில் இருக்கின்ற மக்களும் அவ்வழியிலே நல்லவர்களாக இருப்பார்கள். அப்படியில்லாமல் (நாடு பிடிக்கும் ஆசையால் போர் வெறி கொண்டு) இவனுடைய நாட்டை இன்னொருவர் வென்று கொள்ள, மற்றவர் நாட்டை இவன் போரிட்டு வெல்வது என்று, மாறிமாறிப் பாய்ந்து போரிட்டு மடிவது, புலிக் குணம் கொண்டவனாக வேந்தன் இருக்கின்றான் என்பதற்கு அடையாளம்.

தண்டனை கொடுப்பது அரசனின் கடமை எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 247

“தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே”

அவரவர் சமயத் தகுதிகளுக்கும், கோட்பாடு குறிக்கோள்களுக்கும் ஏற்ப, அவற்றை மேற்கொண்டு அதன்படி நடக்காதவர்களைச் சிவப்பரம்பொருள் எத்தகைய தண்டனைகள் வேண்டுமானாலும் தந்து, அவர்களை அதன் பயனான துன்பத்தை அடையச் செய்வான். இது அடுத்து வரும் பிறவியில் நடக்கப் போவது. எனவே இந்தப் பிறவியில் சமய நெறிப்படி நின்றொழுகா நீங்கள் உடல் வருந்தச் செய்யும் தண்டனையைத் தருவது அரசனுடைய கடமை ஆகும்.

மக்களைத் திருத்துதல் மன்னன் கடமை எனக்கூறும் திருமந்திரப் பாடல் எண் 1657

“இன்பமும் துன்பமும் நாட்டார் இடத்துள்ள
நன்செயல் புன்செயலால் அந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாள்தோறும் நாட்டினில்
மன்பதை செப்பம்செயின் வையம் வாழுமே”

ஒரு நாட்டின் இன்பமும் துன்பமும் அந்த நாட்டில் வாழும் மக்கள் மேற்கொண்டொழுகும் நல்லறச் செயல்கள், தீயகுணச் செயல்கள், இவற்றைப் பொறுத்தே அமையும் என்று பெரியோர்கள் கூறுவர். எனவே நாடாளும் மன்னன் இவற்றை நன்றாக அன்றாடம் ஆராய்ந்து பார்த்து நாட்டு மக்களை நல்வழிச் செலுத்தி, தீயவழி போகாது அவர்களைத் திருத்திச் சரி செய்வானானால், அது உலகிற்குச் செய்யும் உபகாரமாகும்.- உலகம் வாழ உதவும் வழியாகும்.








# இறைவனின் கருவறையின் மேல் ஓர் இடைச்சியின் கல்லைக் கண்டேன்!

தஞ்சை பெரிய கோயில் கட்டினது யாரு? ன்னு கேட்டா ...
எல்லோரும் யோசிக்காமல் "" ராஜ ராஜ சோழன்னு...." பதில் சொல்லிடுவாங்க.
ஆனால் ராஜ ராஜ சோழனோ அந்த கோயில கட்டினது நான் இல்லை....? என்னு சொல்றாரே !
தஞ்சை பெரிய கோயில் கட்டி முடிக்க பட்டு குட முழுக்கு கும்பாபிசே கத்துக்கு நாளும் குறிக்கப்பட்டு விட்ட நேரம் அது.....
கோயில் எதிர் பாத்தபடி நல்லபடியாய் கட்டி முடிக்க பட்ட சந்தோசத்தில் ராஜ ராஜ சோழன் நிம்மதியா தூங்கும் போது... கனவில் இறைவன் ஆன பரமசிவன் அவன் முன்னே எழுந்தருளினார்.
" ராஜ ராஜ ! என்றழைக்க ...
ராஜ ராஜ் சோழன் இறைவா என் பாக்கியம் என்னவென்று சொல்லவது... தாங்கள் எனக்கு காட்சி தந்தது நான் செய்த பாக்கியம்...
தங்களுக்கு நான் கட்டிய கோயில் எப்படி இருக்கிறது...? இந்த ஊரிலே எல்லோரும் வியந்து பார்க்கும் மிக பெரிய கோயிலாக கட்டியுள்ளேன்...
அதற்குழு தஞ்சை பெரிய கோயில் என்று பெயர் சூட்ட போகிறேன்... மகிழ்ச்சி தானே தங்களுக்கு? என்று கேட்டான் ஆனந்தமாக.
இறைவன் சிரித்து கொண்டே " ம்ம்ம் மிகவும் ஆனந்தமாக இருக்கின்றோம்... ஒரு இடைச்சி மூதாட்டியின் காலடி நிழலின் கீழ் யாம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம் "என்று கூறி மறைந்தார்
ராஜ ராஜனின் கனவும் கலைந்தது.

விழித்துதெழுந்த ராஜராஜன் தான் கண்ட கனவை பற்றி மறுநாள் அரசவையில் கூறி அந்த கனவுக்கு விளக்கம் கேட்டான்.
யாருக்கும் பதில் தெரியவில்லை.
பின் நேராக கட்டி முடிக்க பட்ட தஞ்சை பெரிய கோயிலுக்கு சென்றான்.
கோயில் சிற்பியிடம் தான் கண்ட கனவை கூறி விளக்கம் கேட்டான்.

சிற்பி தயங்கியவாறே "அரசே கடந்த மூன்று மாதங்களாக மோர் விற்கும் வயதான ஒரு ஏழை இடைச்சி மூதாட்டி தினமும் மத்திய வேளையில் இங்கு வருவார்...
ஏழ்மை நிலையில் இருந்தாலும் தன் பங்குக்கு இந்த கோயிலுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணி தான் விற்கும் மோரில் பாதியை காசுக்காகவும்இஇ
பாதியை இந்த கோயிலுக்காக வேலை செய்யும் எங்களுக்கு குடிக்க இலவசமாக கொடுப்பார்....
நாங்கள் காசு கொடுத்தாலும் வாங்க மறுத்திடுவார்.

ஏதோ இந்த ஏழை இடைச்சியால் இந்த கோயிலுக்கு செய்ய முடிந்த தொண்டு என்று கூறி காசு வாங்க மறுத்திடுவார்.

இப்படி இருக்கும் போது போன வாரத்தில் ஒரு நாள் ஆலய சிற்பங்கனின் எல்லா வேலையும் முடித்த எங்களுக்க இறைவனின் கருவறையின் மேலிருக்கும் கல்லை மட்டும் சரி செய்யவே முடியவில்லை....

நாங்களும் அதன் அளவை எவ்வளவோ முயற்சி செய்து அளவெடுத்து வைத்தாலும் ஒன்று கல் அளவு அதிகமாக இருந்தது அல்லது குறைவாக இருந்தது .
எங்கே ஆலய பணி நடக்காமல் போய்விடுமோ என்று நாங்கள் கவலையுடன் இருந்தோம்.....

அப்பொழுது இந்த மோர் விற்கும் இடைச்சி மூதாட்டி வந்து மோர் கொடுத்து கொண்டே, ஏன் கவலையாய் இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள்
நாங்களும் கல் சரி ஆகாத விசயத்தை சொன்னோம்.
அதற்கு அவர்கள் என் வீட்டு வாசற்படியில் பெரிய கல் ஒன்று உள்ளது... நான் அதை தான் என் வீட்டுக்கு வாசற்படி போல் வைத்துள்ளேன்.
அதை வேண்டுமானல் எடுத்து பொருத்தி பாருங்கள் என்றார்
நாங்களும் நம்பிக்கை இல்லாமல் அந்த இடைச்சி மூதாட்டி சொன்ன கல்லை எடுத்து வந்து பொருத்தினோம்....

என்ன ஆச்சரியம் ! கருவறையின் மேற் கூரைக்கு அளவெடுத்து வைத்து போல் மிக சரியாக இருந்தது.
அதைத்தான் இறைவன் தங்களுக்கு உணர்த்தி இருப்பார் என்று அடியேன் நினைக்கிறேன்... என்றான் சிற்பி
இதை கேட்டதும் ராஜ ராஜனுக்கு எல்லாம் புரிந்தது....


எவ்வளவு பொருள்செலவு செய்து கோயில் கட்டினாலும் இறைவன் நேசிப்பது அன்பான ஒரு ஏழையின் பக்தியை தான்.
ஆரவாரமாக பொருள் செலவு செய்து நான் கோயிலைக் கட்டினாலும் அமைதியாக ஏழ்மை நிலையிலும் அந்த இடைச்சி விற்க இருந்த மோரை கோயில் திருப்பணி செய்வோருக்கு அர்பணித்தாரே...
ஏன்று கண்ணீர் மல்கி...
பின் சுதாரித்து தன் அமைச்சரை அழைத்து அமைச்சரே
கும்பாபிசேகம் நடக்கும் நன்னாளிளல் அந்த இடையர்குல மூதாட்டியை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்...
நான் வெண்குடை ஏந்தி அந்த அம்மையாரை வைத்து கும்பாபிசேம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள் .....
இந்த கோயில் கட்டியது அந்த மூதாட்டி இடைச்சி தான் ... நான் அல்ல...
இதற்கு இறைவனே சாட்சி என்றான்.

**படித்ததில் பிடித்தது** **உ . கெங்காதரன்.**





உங்கள் அனைத்து தேவைகளுக்கும்
மலிவு
திருப்தி
பாதுகாப்பு
உங்களிடம் தற்போது இருக்கும் காப்புறுதியை நாம் இன்னும் மலிவாக பணம் கட்ட உதவி செய்வோம்.
PERSONAL LOAN
HOUSE CREDITS
- MORGAGES
INVESTMENT FUNDS
01788482965
Srithas Murugapathmarajah
Westfalendamm 188
44141 Dortmund



# Fibonacci இலக்கம் என்ற பிரபஞ்ச எண்தான் இந்த அகர இலக்கமா!

லியோனார்டோ பிபோனச்சி (Leonardo Fibonacci) என்பவரால் மேலத் தேயரிற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இலக்கம் தான் பிபோனாச்சி இலக்கம். அதனால்த் தான் அவரின் பெயரையே அந்த இலக்கத்தின் பெயராகச் சூட்டிவிட்டனர். ஆனால் பிபோனாச்சி என்பவர் தன்னுடைய புத்தகத்தில் தெளிவாகக் கூறியுள்ளார், இந்த இலக்கத்தை தான் கண்டுபிடிக்கவில்லை. இதை இந்திய அரேபிய இலக்க முறைகளில் இருந்து கண்டு வியந்தேன் என்று தன் புத்தகத்தில் 1202 இல் குறிப்பிட இந்த இலக்க முறை பற்றிய ஆராய்ச்சி தொடங்கியது.

அப்படி ஆராய்ச்சி செய்யுமளவு என்ன உள்ளது என்று மேற்கொண்டு தேடும் போதுதான் ஒரு பிரபஞ்ச உண்மையைக் கண்டு பிடிக்க முடிந்தது. தமிழர்கள் நாம், இந்த வாழ்க்கையே ஒரு கணக்கு என்று கூறுவது வழக்கம். அதேபோல கணித மேதைகளும் இந்த வாழ்க்கை உயிர்கள் பிரபஞ்சம் பிண்டம் எல்லாமே ஒரு கணக்குத் தான், என்று கண்டு நிறுவியும் காண்பித்துள்ளானர். அதில் ஒரு அங்கம் தான் இந்த பிபோனச்சி இலக்கத் தொடரும். அதாவது இலக்கத் தொடர் என்றால் 1,2,3,4,5,6,7,8,9,10...... என்று சமனான எண்ணிக்கையில் கூட்டப் பட்டுச் செல்லும் இலக்கம் ஒரு இலக்கத் தொடர். 2,4,6,8,10...... என்று ஒரு கோட்ப்பாட்டின் அடிப்படையில் எழுதப் படும் இலக்கமும் ஒரு இலக்கத் தொடர் இதை இரட்டைஎண் என்று சொல்வார்கள். இதேபோல ஒற்றை எண் 1,3,5,7,9.... முக்கோணி எண் 1, 3, 6, 10, 15... என்று பல எண்தொடர்கள் உண்டு. அதில் ஒரு அதிசய இலக்கம் தான் இந்த பிபோனாச்சி இலக்கம்.

பிபோனச்சி இயக்கத்தின் தொடர் 1,1,2,3,5,8,13,21..... என்று செல்கின்றது. இந்தத் தொடரை உற்றுக் கவனிப்பதில் என்ன அதிசயம் என்றால், தொடரில் உள்ள ஒரு இலக்கம் அதற்கு முந்தய இலக்கத்தோடு கூட்டப்பட்டு அடுத்த இலக்கம் உருவாகின்றது. உதாரணத்திற்கு, மூன்றாவது இலக்கம் 2 அதற்கு முன்னுள்ள 1 உடன் கூட்டப்பட்டு 3 உருவாகின்றது. ஆகவே 3 நான்காவது இலக்கம். இவ்வாறே 3+2=5 ஆகவே 5 ஐந்தாவது இலக்கம். இவ்வாறே இயக்கத்தின் தொடர் நீண்டு வளர்ந்து 8,13,21,34,55.... என்று செல்கின்றது.

இப்போது இந்த தொடரில் வரும் இலக்கத்தின் அடிப்படையில்த் தான் இந்த இயற்கையில் பல பொருட்கள் உள்ளது என்று இயற்கை ஆய்வாளர்கள் வெளியிட ஆராய்ச்சி விரிவடைகின்றது. ஒரு தாவரத்தில் உள்ள பூக்களின் எண்ணிக்கை, பூக்களில் உள்ள இதழ்களின் எண்ணிக்கை என்று தொட்ட இடமெல்லாம் இந்த இலக்கத்தின் ஆதிக்கத்தைக் கண்ட ஆய்வாளர்கள் வியந்தனர். அதைத்தொடர்ந்து கணித மேதைகள் இந்த இலக்கத்தை ஆராயத் தொடங்கினர். இந்த இலக்கத்தை வைத்து ஒரு வரைவு வரைவோம் என்று ஆரம்பித்த ஆராய்ச்சிபிரபஞ்சத்தின் அதிசயத்தைக் கண்டுபிடிக்கும் என்று அன்று உணராத கணிதவியலாளர் இந்த இலக்கத்தை சாதாரணமாக நினைத்தனர்.




சிவவினோபன்.

முதலில் இந்த இலக்கங்களைக் கொண்டு சதுரங்களை அமைக்கத் தொடங்கினர். அந்த சதுரம் மூன்றாவது இலக்கம் வரையும் போதே செவ்வகமாக மாறியது. அதன் பின் அந்த செவ்வகம் விரிந்து சென்றது. இப்போது இந்த செவ்வகத்தின் விளிம்பை முட்டிச் செல்லும் வகையில் ஒரு வளைவை வரைந்தனர். இந்த வளைவின் பாதையைக் கணிக்க வளைவின் Ratio ஐ எடுக்கும் போது, வளைவு என்ன தான் விரிந்து சென்றாலும் அதன் விரிந்த மாற்றம் எப்போதும் சமனாகவே இருக்கின்றது என்று கண்டுபிடித்தனர்.

இது 1.6180 என்றே எப்போதும் இருக்கின்றது என்பதை விட கிரேக்கர்களில் பிடியஸ் (Phidias) என்பவரால் உருவாக்கப்பட்ட சிலைகள் எப்போதும் இந்த இலக்கக் கட்டமைப்பிற்குள் வந்திருப்பதை பார்த்து அசந்தனர். அதனால் இந்த Ratio விகிதத்தை Golden Ratio என்று குறிப்பிட்டு பிடியாஸ் என்பவரை நினைவூட்டும் வகையில் Phi ( அல்பா) என்ற கிரேக்க குறியீட்டை இதற்கு வைத்தனர். (அல்பா = 1.6180)





அது மட்டும் இன்றி காலப்போக்கில் இந்த செவ்வகத்துள் வரைந்த வளைவின் அமைப்பில்த் தான் இந்த தாவரங்கள் அமைந்துள்ளன உடல் உறுப்புக்கள் அமைந்துள்ளன,இந்த உலகம் அமைந்துள்ளது பிரபஞ்சம் கூட இதே வளைவில்த் தான் வளைந்து விரிந்து செல்கின்றது என்று சொல்லும் பொது மேலும் ஆச்சரியப்பட்டு இ ந்த அந்த அமைப்பை உற்றுநோக்கிய எனக்கு ஒரு ஆச்சரியம் காத்துக்கிடந்தது. அந்த அமைப்பை வலம் சுழியாக வரைந்தால் எம் தாய் மொழியின் ஆரம்பமான அ என்ற எழுத்தின் அமைப்பில் இருப் பதைக் கண்டு அசந்தேன். அதனால் இந்த இலக்கத்திற்கு அகர இலக்கம் என்று நான் பெயரிட்டேன். பெயரிட்டு முடிய ஒரு திருக்குறள் தான் எனக்கு நினைவிற்கு வந்தது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.






உங்கள் அபிமான வியாபார
ஸ்தாபனங்களில் கிடைக்கும்
NEW
ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அ.க.ம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
StaR-Impex
www.star-impex.de

# மருந்தும் வாழ்வுமாய்





**பொன்.புத்திசிகாமணி.**

நான் நினைக்கேல்லை.இவனை இங்கே காண்பேன் என்று. அதுவும் அமெரிக்காவில் இந்த மோலுக்குள்ள. முப்பது வருடத்திற்குப்பின் இந்த சந்திப்பு நிகழ்ந்திருக்கிறது.நானே முதலில் அவனைக் கண்டு கொண்டேன்.அதே முகம் .மாற்றம் என்று பெரிதாகத்தெரியவில்லை.

அதே ஏமாளித்தனம் இருப்பது போல் அங்கும் இங்கும் பாராக்குப் பார்த்தபடி வருவோர் போவோரைப் பார்த்து தனக்காகவே சிரித்தான்.
நான் எப்படியும் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை மனைவியுடன் அமெரிக்கா போய் சில நாட்கள் தங்கி வருவேன்.அதுவும் இந்த அழகான புளோரிடாவில்.இங்குதான் எனது அன்பான மைத்துனர் குடும்பமிருந்தது. நிற்கிற காலங்கள் செந்தளிப்பானவை.

அவர்கள் வீட்டிலிருந்து ஐம்பது கிலோமீற்றரில்தான் ஒலண்டோ சிற்றி .இங்குதான் இந்த மோல் இருந்தது.ஒலொண்டோ அழகான பெரிய நகரம்.அனைவரையும் கவரும் பல் பொருள் அங்காடிகள் நிறைய இருக்கின்றன. உலகப்புகழ்பெற்ற டிஸ்னி லாண்டும் இங்குதான்.நிற்கிற காலங்களில் எப்படியும் பல தடவைகள் இந்நகரத்திற்குப் போய்வருவோம்.

என்னைவிட என் மனைவிக்கு பெரு விருப்பம் .எப்போதும் மலிவு விற்பனை என்று எழுதிப் போட்டிருப்பார்கள்.மோல் என்றால் பென்னாம் பெரிசுகள். ஒன்றுக்குள் புகுந்தால் அவர்கள் கடைபூட்டப்போறம் என்று கலைத்தபின்தான் தான் நாம் வெளிவருவது வழக்கம்.ஒருநாள் முழுக்க அங்குதான். எங்கட சீவியம். இல்லை பெண்களின் சீவியம். எங்களைப்போல ஆண்கள்,கொஞ்ச நேரம் கடையை மேய்ந்து விட்டு அதன் பிறகு நிழல் இருக்கைகள் தேடி உட்கார்ந்து கொட்டாவிவிட வேண்டியது தான். இந்தச் சந்தர்பத்தில் எப்படித்தான் பெண்களுக்கு இந்த தைரியம் வருமோ!நான் பலதடவை யோசித்ததுண்டு.
அப்படி ஒரு இருக்கையில்தான் இவனைச்சந்தித்தேன்.நல்ல நிழல் மரத்திற்குக் கீழ் இருந்து அவனும் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தான்.
அருகில் சென்று “டேய் மாயவா “என்றேன்.அவன் மலைச்சுப் போய் பேந்தப் பேந்த முழிச்சான்.
“நீங்கள்”? அவன் கேள்வி எனக்குக் கவலையைத் தந்தது.
அடையாளம் தெரியாமல் மாறிவிட்டேனா? நான்.?
அவன் மாயவன் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.சின்னதாய் ஒரு சோர்வு முகத்தில் தெரிந்தது. என்னைவிட ஐந்து வயது இளையவன் தான் அவன். தோற்றத்தில் என்னை விட சற்று உயரம் அடேய் பிடேய் என்று பேசி,உரிமையோடு அடித்துக் கொள்வோம். அப்படி ஒரு நட்பு.

அவன் என்னைக்கண்டு பிடிக்க கொஞ்ச நேரம் எடுத்தது.உணர்ச்சி வசப்பட்டு கட்டிப்பிடித்து கொஞ்சிக் கொண்டோம்.
அவன் கனடாபோய் நீண்டகாலம்தான். யேர்மனியில் ஆரம்ப காலம் கொஞ்சம் தண்ணியும் குதூகலமாகவும் சென்றது.அவன் வேறு இடம் .நான் வேறு இடம் .வருடத்தில் மூன்று நான்கு முறை சந்தித்துக் கொள்வோம்.சந்திக்கும் போது சந்தோசம் தான். ஒருமுறை நீண்ட காலத்திற்குப் பின் சந்தித்த போது அனைத்தையும் மறந்து,ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதாகச் சொன்னான். தன்னைச் சுற்றி ஆன்மீக ஒளி பரவி வருவதாகச் சொன்னான். சுவாமி விவேகானந்தர் ,இராமானுஜர்,அரவிந்தர் புத்தகங்களை விரும்பிப் படிப்பதாகவும் பரவசம் அடைந்து வருவதாகவும் .கண்டால் ஒளிந்து கொள்கிற அளவிற்கு அறுவை. என்னடா? இவன் இப்படி மாறீற்றான் அவனோடு இருந்த நண்பனைக் கேட்டபோது.

அவனுக்குக் கல்யாண ஆசை வந்து ஆட்டிப் படைக்கிது .உண்மை.வீட்டில் யாரும் கண்டு கொள்ளேல்ல,அதற்குத்தான் இந்த ஆன்மீகப் போர்வை என்று அவன் சொன்னான்.அவன் கனடா போய் சில நாட்களின் பின் கல்யாணம் நடந்தது. நானும் எடுத்து வாழ்த்துச்சொன்னதாக ஞாபகம்.அதன் பிறகு பல தடவைகள் கதைச்சிருக்கிறன்.எடுத்தால் எப்போதும் மனைவி புராணம் தான் ,அழகில் இருந்து அன்பாக க் கதைக்கிற வரை.செல்லங் கொஞ்சுவான்.
அதுவும் ஒருவித அரியண்டம் தான். ஆன்மீகம் , துறவறம், ஞான ஒளி என்ற கதைத்த வாயிலிருந்து இந்தப் புழுகை எல்லாம் என்னால் கேட்க முடியாதிருந்தது.

“என்ன? தனிய இருக்கிறாய். மனுசியைக் கடையுக்குள்ள அனுப்பிப்போட்டு இருக்கிறியாக்கும். “இப்ப அமெரிக்காவிலேயே இருக்கிறாய்”நானே தொடர்ந்தேன்.”

“இல்லை அங்கதான். தெரிஞ்சாக்கள் வந்தாப்போல அவியளோட வந்தனான்.”
“உன்ர அழகு ராணியைக் காட்டு மச்சான்”என்றேன் நான்.
“அவ வரேல்லை நான்தான் தனிய வந்தனான்.”
“என்னடா? விசர்க்கதை கதைக்கிறாய்”?
“இருந்தால் தானே கூட்டிக் கொண்டு வாறதுக்கு”
“ஏன் என்ன நடந்தது”நான் கொஞ்சம்
பதட்டத்தோடு கேட்டேன்.

**தொடர்ச்சி 38 ம் பக்கம்**



## பெண்ணுரிமையும் "நேர்கொண்ட பார்வை" யும்





**- எனது பார்வை. ஏலையா க.முருகதாசன்**

பெண் எனப்படுபவள் எத்தகையவளாகவும் இருக்கலாம்.எந்தப் பணியையும் செய்பவளாகவும் இருக்கலாம்.எத்தகையவளாக இருந்தாலென்ன எப்பணியை செய்பவளாக இருந்தாலென்ன அவளின் சுதந்திரம் அவள் நடத்தையை அவளே தீர்மானிக்கும் உரிமை உண்டென் பதை இப்படம் தீர்க்கமாக சுட்டிக் காட்டியுள்ளது.

இப்படத்தில் வேறு வேறு பணிகளைச் செய்யும் மூன்று பெண்களின் சுதந்திரமான நடவடிக்கைகள் மீது கொண்ட சமூகப் பார்வை நிமித்தமோ, தனிமனிதர்கள் பார்க்கும் பார்வை பற்றியோ அதற்கமைய அவர்களை தப்பானவர்களாக கணிக்க முடியுமா என்பதுடன் ஒரு பெண்ணுக்கு ஆண் நண்பர்கள் இருப்பது தப்பானதா எனவும் இப்படம் கேள்வி கேட்டுள்ளது.

ஒரு ஆணுடன் ஒரு பெண் சிரித்துப் பேசினாலோ தற்செயலாகவோ அன்றி எந்த உள்நோக்கமும் கொண்டிராத பெண் ஒரு பெண்ணின் உடலைத் தொட்டுக் கொண்டு பேசினாலோ அதை எப்படித் தவறான கண்ணோட்டத்தில் பார்க்க முடியும் என்பதை நேர்கொண்ட பார்வை என்ற படத்திற்கப்பால் சமூக நிலையில் பலரோடான அறிமுகங்களின் போது ஒரு ஆண் பெணணின் தோளில் கைபோட்டு மகிழ்ச்சியைத் தெரிவிப்பது அல்லது வக்கிர நோக்கமில்லாது கட்டியணைத்து மகிழ்ச்சியைத் தெரிவிப்பது அல்லது ஆறுதல் படுத்துதல் என்பன நடைபெறுகின்றன.

நேர்கொண்ட பார்வை என்ற இந்தப் படம் இத்தகு புரிந்துணர்வு தழுவல்களையோ ஆறுதல் படுத்தல்களையோ பெண்களை தவறான கண்ணோட்டத்தில் பார்க்காதீர்கள் என்பதை வலியுறுத்துகின்றது.

உண்மையில் இந்தப்படம் பல்வெறு சிந்தனைக் கிளைகளை துளிர்விடச் செய்திருக்கின்றது.

இப்படத்தில் பாதிக்கப்பட்ட பெண்களாக வரும் மூவரும் தாங்கள் ஆண் நண்பர்களிடம் உதவி கேட்டிருக்கிறோம் அவர்களின் நட்பை விரும்பியிருக்கிறோம் என்பதை மறுக்கவில்லை.ஒரு பெண்ணுக்கோ அல்லது ஆணுக்கோ எதிர்ப்பாலினத்தவருடன் அருகிருத்தல் அவர்களின் சுவாசம் ஒருவர் மீது ஒருவர் படுதல் என்பதை விரும்பும் நிலை உண்டென்பதை அப்படியெல்லாம் இல்லை என்று என்னால் பூசிமெழுக முடியாது.இந்தப் படத்தைப் பார்க்கும் சாதாரண இரசிகனுக்கும் எழுத்துத்துறை சார்ந்த இரசிகனுக்குமிடையில் உள்வாங்கும் நிலை வேறு வேறானவை.

அந்த மூவரில் ஒரு பெண் ஆண் நண்பருக்கு போத்தலால் ஏன் அடித்துக் காயப்படுத்தினாள் என்பதும், அந்த ஆண் அவளைப் பழிவாங்க நண்பர்களுடன் இணைந்து எவ்வாறு பாலியல் ரீதியாக அவளை அவலத்திற்கு உள்ளாக்கினாள் என்பதை அவள் நீதிமன்றத்தில் சொல்கிறாள்.உண்மைகளை பேசுதல் என்பது நியாயத்திற்காக போராடும் வேகத்தை இலகுபடுத்தி துரிதப்படுத்தும் தண்டனையைப் பெற்றுக் கொடுக்கும் என்பதை நீதிமன்றத்தில் வைத்து, வக்கீல் நீ எத்தனை வயதில் கன்னிகழிந்தாய் என்ற போது தனது ஆண் நண்பரின் உடல் ரீதியான தொடர்பால் 19 வயதில் கன்னி கழிந்தேன் என்று சொல்லும் போதும் வேறு யாருடனாவது தொடர்பு கொண்டாயா என்று கேட்ட போது இரண்டு மூன்று பேருடன் தொடர்பு கொண்டிருக்கிறேன் என அவள் சொன்ன போது, பணம் தந்தார்களா, நிர்பந்தித்தார்களா என்று கேட்ட போது இல்லை என்ற அவளின் பதிலால் அங்கிருந்துதான் பெண்களின் உரிமையை எவ்வித சமரசமுமின்றி ஏற்றுக் கொள்ளும் பெண்ணுரிமைக் கருத்து நிலைநிறுத்தப்படுகின்றது.

39ம் பக்கத் தொடர்ச்சி...

37 ம் பக்கத் தொடர்ச்சி

## மருந்தும் வாழ்வுமாய்

"நீ நினைக்கிற மாதிரி ஒண்டுமில்லை. ஆரோ ஒரு சாமியைப் பார்க்க இந்தியாவுக்குப் போன மனுசி வரமாட்டன் என்று அங்கேயே நிற்கிது."அவன் சொல்லும் போது எனக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது.

அவன் எப்போதும் சீரியசாகக் கதைத்ததில்லை. நகைச்சுவை உணர்விருக்கும்."கலியாணத்தோடை உன்னுள் எழுந்த ஞான ஒளி மறைய, மனுசிக்கு உதயமாகிற்றாக்கும்" நான் நக்கலாகக் கேட்க

"உனக்கு சிரிப்பாயிருக்கு இரண்டு பிள்ளயளையும் விட்டிட்டு,போய் இரண்டு வரிசமாச்சு,மச்சான்.வரமாட்டன் என்று அங்கயே நிக்கிது.பத்தாக்குறைக்கு நானும் இந்தியாவுக்குப் போய் வா ?வீட்டபோவம் என்று கேட்க ,தான் வரமாட்டன் இந்த மடத்திலேயேதான் இனி என்ர காலம் . சாமிக்குத் தொண்டு செய்வதே சந்தோசம்.அப்ப பிள்ளையளை என்ன செய்யிறது ,ஏன்? நீங்கள் இருக்கிறியள் தானே! ஒரு தாய் இருக்கிற மாதிரி வருமே!

அவங்கள் வளர்ந்திற்றாங்கள் .இருக்கும் வரை சேர்த்து வச்சிருங்கோ, முடியாவிட்டால். கலைச்சுவிடுங்கோ அவங்கள் தங்கடை பாட்டைப் பார்த்துக் கொள்ளுவாங்கள்."

என்னத்தைச் சொல்ல விட்டிட்டு வந்ததுதான்" ஒரு ஆழமான பெரு மூச்சுடன் அவன் சொல்லி முடிச்சான். அதில் அவனது கவலை தெளிவாகத்தெரிஞ்சிது. என்னுடைய குதூகலமும் கொஞ்சமாகக் குறைஞ்சுதான் போச்சுது. இருவரும் சற்று அமைதியானோம். "இல்லாமலே இருந்திருக்கலாம். இருந்திற்று இல்லாமல் போனதை தாங்க முடியவில்லை மச்சான்"அவனே இதைச் சொன்னான்.

"பிள்ளையளுக்கு எத்தின வயது?"

ஒருவனுக்குப் பதினாறு, மற்றவனுக்கு பதினாலு. அவங்களும் வளர்ந்திற்றாங்கள் தான் என்றாலும் எப்படி மச்சான்?

அவங்கள் கெட்டிக்காரர் தான்.இந்த வயதில்தான் குடும்பம் சந்தோசத்தை பங்கு போடும்.என்னிலயும் பிழைதான் நானும் பக்தி தியானம் என்றிருந்திற்றன் "என்றான்.

அவனோடு வந்தவர்கள் வந்து விடவே எனக்கும் அவர்களை அறிமுகப் படுத்தி பிரிய மனமின்றி ஆரத்தழுவி விடைபெற்றான்.

பிரியும்போது "எப்படி இருக்கிறாய் மச்சான் "என்று கேட்டேன். "மருந்தும் வாழ்வுமாய்" "இதுவும் கடந்து போகும் மச்சான் "இது என்னுடைய பதில்.

என் மனைவியையும் பார்த்திற்றுப் போக ஆவலாய் இருந்தான்.மனுசி வந்தால்தானே!

காரில் வரும் பொழுதுதான் மனைவி கேட்டாள்"குளிசையெல்லாம் போட்டியளோ?"

"நீ கொண்டு போனால் நான் எப்படிப் போடுறது" "சொறியப்பா"என்றவள் ஒரு சிறங்கை குளிசைகளையும் தண்ணீரையும் தந்தாள்."இதுதான் அவன் சொன்ன வாழ்க்கை"எனக்கும் தான் இது பொருந்தும்."மருந்தும் வாழ்வமாய்"மனதுக்குள் சொல்லும் போது எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

இதைச்சொன்னால் எத்தனை பேருக்குச் சிரிப்பு வரும்."வயலும் வாழ்வும்""விருதும் விருந்தும்"மாதிரி "மருந்தும் வாழ்வுமாய்".

எனக்கும் பிடித்த தலைப்பு.

இன்றிரவு என் மனைவிக்கு சொல்ல நல்ல விசயம் இது. ஆனாலும் கவலைதான் .முழிச்சிருந்தால் கேட்பாள்.

இது முடிஞ்சிற்றுது இப்ப.....






“நோ“ (No)என்ற ஒரு பெண்ணின் மறுப்பை நிராகரிக்கவோ அதை அலட்சியப்படுத்தி தனது எண்ணத்தை எந்த ஆணாலுமே அடையமுடியாத ”நோ”(NO) என்ற வார்த்தை ஒரு இரும்புத் தடுப்பாக இருப்பதும் பாலியல் ரீதியாக ஒரு ஆணுடன் தொடர்பு கொள்ள விரும்பாத பெண் “நிறுத்து“ (ஞவழி)என்று சொன்னால் நிறுத்து என்பதற்கப்பால் அடுத்த அடியை எந்த ஆணுமே எடுத்து வைக்க முடியாது என்பதை இந்தப் படம் ஓங்கிச் சொல்லியிருக்கின்றது. அதே வேளை இறுக்கமாகச் சுட்டிக்காட்டாமல் இயல்பாக சுட்டிக்காட்டுவது போல பெண்கள் தமக்கான தவறான சுதந்திரம் விருப்பம் என்ற பெயரில் அவர்கள் விடும் தவறுகளும் பெண்களுக்கெதிரான விளைவுகளை ஏற்படுத்து கின்றது என்பதையும் இப்படம் சொல்லியிருக்கின்றது.படத்தை கவனித்துப் பார்ப்பவர்களுக்கு அது தெரியும்.

பாலியல் தொழில் செய்யும் பெண்ணிடம் நீ பாலியல் தொழில் செய்பவள்தானே என இழிநிலைப் பார்வை கொண்டு அவளுடன் உடல் ரீதியாக தொடர்பு கொள்ள அவளின் விருப்பமின்மையை மீறி முயற்சிக்கும் ஆணைக்கூட “நோ“ (No) நிறுத்து“ (Stop) எனச் சொல்லும் உரிமை அவளுக்குண்டு என்பதை இப்படத்தின் கருத்திலிருந்து இதையும் நீட்சியாகப் பார்க்க முடியும்.

பாலியல் வன்புணர்வு என்பதில் பெண்ணை அவஸ்தைப்படுத்தும் புணர்வு சார்ந்த வண்செயல் காருக்குள் அவளை கொடுமைப்படுத்தும் செயலாகவுமிருக் கின்றது.நடிகர் அஜித்தின் நடிப்பு பட்டை தீட்டிய நடிப்பாக இருக்கின்றது. வக்கீலாக வரும் நடிகர் அஜித்தின் நடிப்பு இவ்வளவு நடித்தால்தான் இதற்குப் பொருந்தும் என்பது போல இயக்குனர் வினோத் அளந்து நடிக்க வைத்திருக்கின்றார்.
கொலிவுட் நடிகர்கள், மலையாள நடிகர்களில் சிலர், வங்க நடிகர்களில் சிலர் நடிப்பது தெரியாமல் நடிப்பவர்கள்.நடிகர் அஜித்தின் நடிப்பும் இந்தப் படத்தில் அவரின் உடல்மொழியால் கச்சிதமாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. பெண்ணின் உரிமை “நோ“(No) “நிறுத்து“ (Stop)என்ற மறுப்பில் No means No,Stop means Stop என்று ஆணி அடித்தாற் போல சொல்லப் பட்டிருக் கின்றது.




அடுத்த சரணத்தில் உணவுக்காகத் தானிய இறக்குமதி செய்யும் நிலை ஏன் ஏற்பட்டது? இங்கு நிலவளம் இல்லையா, ஒழுங்காகப் பாடுபட்டு உற்பத்தியைப் பெருக்கினால் நமது மதிப்பை மேல்நாட்டில் உயர்த்திக் கொள்ளலாம் அல்லவா என்று ஆவேசமாகக் கேட்கிறார் கவிஞர்.

'என்ன வளம் இல்லை இந்தத் திரு நாட்டில்
ஏன் கையை எந்த வேண்டும் வெளிநாட்டில்?
ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்'

எந்தப் பேதமும் பார்க்காமல் ஒற்றுமையாக உழைக்க வேண்டும். எப்படி உழைப்பது என்பதை அறிந்துகொள்வதொன்றும் சிரமமே இல்லை. அதைத்தான் பொறுப்புடன் முன்னோர்கள் சொல்லி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அனுபவமிக்கப் பெரியோரின் வழிமுறைகளைப் பின்பற்றி உழைத்தால் சாகுபடி பெருகாமல் போகுமா என்று கேட்டு, விவசாயத் தொழிலில் ஈடுபட நினைக்கும் இளைய தலைமுறைக்கு வழியும் காட்டுகிறார் மருதகாசி.

17ம் பக்கத் தொடர்ச்சி...

'கறுப்பென்றும் சிவப்பென்றும் வேற்றுமையாய்க்
கருதாமல் எல்லோரும் ஒற்றுமையாய்ப்
பொறுப்புள்ள பெரியோர்கள் சொன்னபடி
உழைத்தால் பெருகாதோ சாகுபடி'


இந்த நாட்டில் கட்சிகளுக்கும் கட்சிக்கொடிகளுக்கும் பஞ்சமே இல்லை. ஆனால், பட்டொளி வீசிப் பறக்க வேண்டிய கொடி எது தெரியுமா? அதுதான் நாட்டில் பஞ்சம் என்பதே இல்லை என்பதைப் பறைசாற்றக்கூடிய 'அன்னம்' என்னும் உணவுக் கொடி. அது மட்டும் பட்டொளி வீசிப் பறந்துவிட்டால் இரண்டாம் சரணத்தில் கேட்டதுபோல வெளிநாட்டில் உணவுக்காகக் கையேந்த வேண்டிய நிலையே ஏற்படாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் கவிஞர்.

'இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி
எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி
பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக்கொடி - அது
பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி'

முதல் மூன்று சரணங்களின் கடைசி வரிகளை ஒரே ஒருமுறை டி.எம்.எஸ்ஸைப் பாடவைத்த கே.வி.மகாதேவன், இந்தக் கடைசி சரணத்தின் கடைசி வரியை மட்டும் வாத்தியங்களை நிசப்தமாக்கிவிட்டு ஒருமுறைக்கு இருமுறையாய்ப் பாடவைத்திருக்கும் நயம் மக்களிடம் சென்று சேரவேண்டிய கருத்துக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவம். ஓர் இசை அமைப்பாளர் எப்படி ஒரு பாடலைக் கையாள வேண்டும் என்பதற்கு ஒரு பாடம்.
இந்தப் பாடலைப் படத்தில் டைட்டில் முடிந்தவுடனேயே கதாநாயகனின் அறிமுகக் காட்சியாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்று சின்னப்பாதேவர் விரும்பினார்.ஆனால், எம்.ஜி.ஆரோ படம் தொடங்கி ஐந்து நிமிடங்கள் கடந்த பிறகு, இடம்பெற வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். அதற்கு அவர் சொன்ன காரணம்: “படம் பாக்க வரவங்க எல்லாருமே முதல்லேயே வந்துடுவாங்கன்னு சொல்ல முடியாது. சில பல காரணங்களாலே ஐந்து, பத்து நிமிடங்கள் தாமதமா வாரவங்க கூட இருப்பாங்க. அருமையான கருத்தைச் சொல்லுற இந்தப் பாட்டு, எல்லாரையும் போய்ச் சேரணும். அதனாலே ரெண்டாம் காட்சியோட தொடக்கமா இந்தப் பாடல் காட்சி இருக்கணும்” அவரது விருப்பப்படியே செய்தார் சின்னப்பாத் தேவர். இதைவிடச் சிறந்த அங்கீகாரம் ஒரு பாடலுக்குக் கிடைக்க முடியுமா என்ன? நன்றி :இந்து தமிழ்




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்திற்கு
EurAsian - Tours
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography Cinematography Album Making Graphic Designing
Wedding Events Live Birthday Saree Ceremony Graphic Design Printing
AKR Visualizers
PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
professional photography cinematography
+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Dortmund மாநகரில்
Double Horse
Nila
AGAM
அகம்
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
BTM
Aachi
Rabeena
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY
Kingfisher Nestle MDH Shan Lipton Laziza